பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 வைகாசி 15 புதன்கிழமை (29-05-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:185

✹ சுதந்திரமாக நடமாடத் தடை! ✹ மக்களைச் சந்திக்கவும் கட்டுப்பாடு!!

# தீவகத்துக்கு புலிகளை அனுமதிக்க அரசுத் தரப்பு 12 நிபந்தனைகள்!!

## கண்காணிப்புக் குழுவுக்கு அறிவிப்பு

யாழ்ப்பாணம்,மே29

**குடாநாட்டின் தீவுப் பகுதியில் தங்கள் அரசியல் பணிகளை ஆரம்பிப்பதற்காக விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் அங்கு செல்வதற்கு அனுமதி வழங்க அரசு பன்னிரெண்டு நிபந்தனைகளை விதித்திருக்கிறது.**

**பிரதமரின் அலுவலகத்தில் இயங்கும் சமாதான நடவடிக்கைகளுக்கான செயலகம் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவருக்கு இதனை அறிவித்திருக்கிறது.**

தீவகப் பகுதிகளுக்குள் புலிகளை அனுமதிப்பது தொடர்பாக சமாதான நடவடிக்கைகளுக்கான செயலணியின் பணிப்பாளர் நாயகம் பேர்னாட் குணதிலக கண்காணிப்புக்குழுவின் பதில தலைவர் ஹெக்லண்டுக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பியிருக்கிறார்.

தீவகத்துக்குச் செல்வதானால் புலிகள் என்னென்ன விதிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்ற விவரங்கள் அதில் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யுத்தநிறுத்த உடன்படிக்கையின் 1.13 சரத்துக்கு அமைய வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இலங்கை அர

(12ஆம் பக்கம் பார்க்க)

## தொலைபேசிச் சேவையில் நெருக்கடி ஓரளவு நீங்கியது!

யாழ்ப்பாணம்,மே29

குடாநாட்டுக்கும் வெளியிடங்களுக்குமான தொலைபேசித் தொடர்புகளில் நீண்டகாலமாக இருந்து வந்த நெருக்கடி நிலை நேற்றுடன் ஓரளவு நீங்கியது. வெளியிடங்களுக்கான அழைப்புகளை நேற்று மாலை முதல் தாமதமின்றிப் பெற்றுக்கொள்ள முடிந்தது.

தொலைபேசிச் சேவையைச் சீராக்கும் வேலைகள் கடந்த சில தினங்களாக ரெலிகொம் நிறுவனத்தின் யாழ்ப்பாணம், மன்னார் கோபுரங்களில் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

இந்தப் பணிகள் நேற்று மாலை பூர்த்தியடைந்தன. அதன்பின் சேவையும் சீரானது.

இதுவரை காலமும் வெளிச் செல்லும் அழைப்புகளுக்கு 72 இணைப்

(12ஆம் பக்கம் பார்க்க)

வடக்கு கடற்படைத் தளபதி கூறுகிறார்:

## மனிதாபிமான அடிப்படையிலேயே மீன்பிடிக் கட்டுப்பாடுகள் தளர்வு!

### தேவை ஏற்படின் மீண்டும் அமுல்செய்வோம்!!

யாழ்ப்பாணம்,மே29

குடாநாட்டு மீனவர்கள் மீன்பிடிப்பதற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளை மனிதாபிமான அடிப்படையிலேயே நீக்கியிருக்கின்றோம். தேவை ஏற்பட்டால் மீண்டும் கட்டுப்பாடுகளை அமுல்செய்வோம்.

- இவ்வாறு தெரிவித்தார். வடபிராந்திய கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் எஸ்.பி.வீரசேகர

காங்கேசன்துறை கடற்படைத் தளத்தில் நேற்றுமுன்தினம் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருடன் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கிளிநொச்சி அலுவலக அதிகாரி பேர்டி ஹாட்லி கெனன், யாழ். மாவட்ட கடற்கண்காணிப்பு அதிகாரி போல் எரிக், விடுதலைப் புலிகளால் நியமிக்கப்பட்ட கண்காணிப்புக் குழு உறுப்பினர் வண.ஞானரத்தினம் அடிகள், அரசுத் தரப்பால் நியமிக்கப்பட்ட கண்காணிப்புக் குழு உறுப்பினர் அ.பஞ்சலிங்கம் ஆகியோர் இக்கூட்டத்தில் பங்குபற்றினர்.

கடற்படைத் தரப்பில் வடபிராந்திய தளபதியுடன் வடமராட்சி, மாதகல், தீவகம் ஆகிய பிரதேசங்களின் கடற்படைத் தளபதிகளும் கலந்து கொண்டனர்.

விடுதலைப் புலிகள் தீவகம் செலவதற்கு அனுமதிப்பதற்கு விதிக்கப்பட்டுள்ள 12 நிபந்தனைகள் தொடாபாக கடற்படைத் தளபதி விளக்கம்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ‘சயனைட்’ ஓர் ஆயுதம் என்கிறார் படைத் தளபதி

யாழ்ப்பாணம்,மே29

விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் வைத்திருக்கும் சயனைட் குப்பி ஓர் ஆயுதம்தான். அதன் மூலம் ஒருவரைக் கொலை செய்ய முடியும்.

- இப்படிக் கூறினார் வடக்குப் பிராந்திய கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் எஸ்.பி.வீரசேகர.

காங்கேசன்துறை கடற்படைத் தளத்தில் நேற்றுமுன்தினம் கண்காணிப்புக்குழு உறுப்பினர்களுடன் கலந்துரையாடியபோதே அவர் இப்படித் தெரிவித்தார்.

தீவுப் பகுதியில் அரசியல்பணி புரியச் செல்லும் புலிகள் இயக்க உறுப்பினர்கள் தம்மோடு சயனைட் வில்லைகளை எடுத்துச் செல்லக் கூடாது என்று அரசு நிபந்தனை

(12ஆம் பக்கம் பார்க்க)

## மீன்பிடிக் கட்டுப்பாடுகள் நீங்கவில்லை; நிலைமை அப்படியே தொடர்கின்றது!

### கடற்றொழில் சமாசத் தலைவர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,மே29

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான புரிந்துணர்வு உடன்படிக்கை அமுலுக்குவந்து 90 நாள்கள் கடந்துவிட்ட போதிலும் வடக்குக் கடலில் மீனவர்கள் சுதந்திரமாக மீன்பிடிப்பதற்கு இன்னமும் அனுமதிக்கப்படவில்லை.

யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ்.தவரட்ணம் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

வடக்கு - கிழக்குக் கடலில் மீன் பிடிப்பதற்கு இருந்துவந்த தடைகள் நீக்கப்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் அறிவித்திருந்தார். அதன்பின் கடலில் நிலைமைகள் எப்படி உள்ளது என்று கேட்டபோதே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புரிந்துணர்வு உடன்படிக்கையின் படி 90 நாள்கள் கடந்தபின்னர் சுதந்திரமாக மீன்பிடிக்க அனுமதிக்கவேணடும்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## அரசு மீது பாலசிங்கம் மீண்டும் குற்றச்சாட்டு!

### சுவிஸ் விஜயத்தின்போது

சூரிச்,மே29



கைச்சாத்தாகி மூன்றுமாதங்கள் கடந்து விட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையை நடைமுறைப்படுத்த படையினர் மறுக்கின்றனர். புலிகள் மீதான தடையை நீக்க அரசாங்கம் பின்னடிக்கின்றது. இவற்றால் சமாதானப் பேச்சு தடைப்படுகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் இவ்வாறு மீண்டும் குற்றஞ்சாட்டியிருக்கிறார். சுவிஸ்லாந்து சென்ற பாலசிங்கம் அங்கு, புலம்பெயர்ந்த தமிழர்கள் மற்றும் அந்நாட்டு அதிகாரிகள் மத்தியில் பேசும் போதே இப்படிக் குற்றஞ்சாட்டினார்.

சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாவதற்கு முன்னர் இயல்பு நிலையை ஏற்படுத்திக் கொள்வது என்று புரிந்துணர்வு

(12ஆம் பக்கம் பார்க்க)

## இத்தாலிக்கு ஆள்களைக் கடத்தும் சர்வதேச குழுவின் தலைவர் கைது!

கொழும்பு,மே29

வெளிநாட்டவர்களை இலங்கைக்கு அழைத்துவந்து அவர்களை இங்கிருந்து இத்தாலிக்கு அழைத்துச் செல்ல சர்வதேச மட்டத்தில் இயங்கிவந்த ஒரு குழுவின் தலைவரை கம்பஹா பொலீஸார் கைது செய்தனர்.

வெயாங்கொடை பொலீஸ் பிரிவுக்கு உட்பட்ட ஓர் இடத்தில் வீடொன்றில் வைத்து அவர் கைது செய்யப்பட்டார்.

இக்குழுவைச் சேர்ந்த மேலும் 12 பேரைக் கைது செய்திருப்பதாகவும் அவர்களில் 9 பேர் பாகிஸ்தானியர் என்றும் பொலீஸார் தெரிவித்தனர்.

இவர்கள் பயன்படுத்திய நவீன ரக வான் ஒன்றும் இரண்டு மோட்டார் சைக்கிள்களும் கைப்பற்றப்பட்டிருக்கின்றன.

இத்தாலிக்கு சட்டவிரோதமாக அழைத்துச் செல்லப்பட காலி பகுதியில் தங்கியிருந்த 72 பேர் கைது

(12ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி




## 13 பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் வருகின்றனர்

யாழ்ப்பாணம்,மே29

இலங்கையில் உள்ள 13 பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களும் இருநாள் விஜயம் மேற்கொணடு நாளை யாழ்ப்பாணம் வருகின்றனர்.

யாழ்பல்கலைக்கழகத்தில் நாளை காலை 10 மணிக்கு இடம்பெறும் துணைவேந்தர்கள் கூட்டத்தில் இவர்கள் பங்குபற்றவிருக்கின்றனர்.

கொழும்பில் இருந்து கண்டி வீதியூடாக இரு பஸ்களில் வரும் இவர்களுடன் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர், உறுப்பினர்கள் ஆகியோரும் வரவிருக்கின்றனர்.

சுழற்சிமுறையில் ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் மாதாந்தம் இடம்பெறும் துணைவேந்தர்கள் மாநாடு தற்சமயம் போக்குவரத்து சீரானதை அடுத்து இந்த மாதம் யாழ்ப்பாணத்தில் இடம்பெறுகின்றது.

(ஐ-3)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# வன்னி அல்லது யாழ்ப்பாணம் வந்து யுத்தக் கொடுமையைப் பாருங்கள்!

## ஐரோப்பிய நாடாளுமன்ற அபிவிருத்திக் குழுவுக்கு பிரதமர் அழைப்பு!



பிரசெல்ஸ்,மே29

**எங்கள் வன்னி அல்லது யாழ்ப்பாணம், சாவகச்சேரி பகுதிகளுக்கு வந்து யுத்தக் கொடுமைகளையும் அழிவுகளையும் நேரில் பாருங்கள்.**

**இப்படி ஐரோப்பிய நாடாளு மன்றத்தின் அபிவிருத்திக் குழுவிற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்தார். குழுவினர் மத்தியில் பிரதமர் உரை நிகழ்த்துகையில், "நாடு பிரிந்திருக்கிறது; அதை ஒன்றுபடுத்தவே முயன்று வருகிறோம். சமாதானத்தில் எமக்கு நம்பிக்கை இருக்கிறது. ஆனால், பேச்சுக் களுக்கு அவசரப்படப் போவதில்லை" - என்றார்.**

பெல்ஜியம் பிரஸல்ஸ் நகரில் அமைந்திருக்கும் ஐரோப்பிய நாடாளுமன்றத்துக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் விஜயம் செய்தார். ஐரோப்பிய நாடாளுமன்றத தின் அபிவிருத்திக் குழுவின் தலைவரான சுவீடிஷ் எம்.பி.மிரண்டோ ஜோக்கிம் உட்பட எம்.பிக்கள் குழுவினரால் பிரதமர் ரணில் உற்சாகமாக வரவேற்கப்பட்டார்.

பின்னர் ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் பிரதமர் ரணில் விசேட உரை நிகழ்த்தினார். அவர் தமது உரையில் கூறியதாவது:-

சர்வதேச சமூகத்திடமிருந்து தொடர்ச்சியாகக் கிடைத்து வரும் ஒத்துழைப்பு கிடைத்திராவிடின் இலங்கையின் இன்றைய சமாதான முயற்சி முறிவடைந்து மீண்டும் யுத்தம் மூளக்கூடிய நிலையே இருந்தது. அவ்வாறான யுத்த சூழ்நிலை மீண்டும் ஏற்படாதென நான் நம்புகிறேன்.

யுத்தநிறுத்தம் கடந்த டிசெம்பரில் ஆரம்பமானது. பெப்ரவரி மாதமளவில் அதனை நிரந்தர யுத்தநிறுத்தமாக மாற்றமுடிந்தது.

அன்று தொடக்கம் இன்றுவரை யுத்தநிறுத்தம் முறிவடையாது வெற்றிகரமாகத் தொடர அரசாங்கம் பகீரதப் பிரயத்தனத்துடன் நடவடிக்கை எடுத்து வருகிறது.

அனைத்தும் வெளிப்படையாகச் செய்யப்பட்டிருக்கின்றன. சமாதானப் பேச்சுக்கள் விரைவுபடுத்தப்பட வேண்டும் என்று நாம் எண்ணவில்லை. சிலா இந்த நிலைமையை விமர்சிக்கின்றனர். மிகவும் அவதானமான ஒரு நடவடிக்கையில் நான் ஈடுபட்டிருக்கின்றேன். சமாதானம் விரைவாக ஆரம்பமாகாது. இலங்கையில் ஏற்கனவே சமாதானம் ஏற்பட்டுவிட்டதென்று பெரும்பாலானவர்கள் நம்புகின்றனர். சமாதானத்தை ஏற்படுத்த முடியாது என்று எண்ணியிருப்பேனாகில் நான் இக்கூட்டத்துக்கு வந்திருக்கமாட்டேன். சமாதானத்தை ஏற்படுத்த முடியும் என்று நான் நம்பிக்கை வைத்திருப்பதாலேயே இக்கூட்டத்துக்கு வந்தேன். சமாதான முயற்சி வெற்றிபெற ஐரோப்பிய ஆணைக்குழுவின் ஒத்துழைப்பு அவசியமானதாகும். இலங்கைப் பிரச்சினைக்கு உண்மையான தீர்வைப் பெற்றுக் கொடுப்பது உலகம் முழுவதிலும் பரவியிருக்கும் பயங்கரவாதத்தைத் தடுக்க மேற்கொள்ளப்படும் ஒரு முக்கிய நடவடிக்கையாகும்.

பேச்சுமூலம் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு பெற்றுக்கொடுப்பதோடு, பொருளாதாரத்துக்கு ஏற்பட்டிருக்கும் சவால்களை வெற்றிகொள்ள நடவடிக்கை எடுப்பதும் நாம் எதிர்நோக்கும் மற்றொரு நெருக்கடியாகும். அச்சவால்களை வெற்றிகொள்ள எமக்குத் தேவையான ஒத்துழைப்பை ஐரோப்பிய ஆணைக்குழு வழங்க வேண்டும்.

- இவ்வாறு பிரதமர் கூறினார். (ஐ)

## வல்லிபுர ஆலயப் பகுதியிலிருந்து படையினர் விலக்கப்பட்டனர்

தென்மராட்சி,மே29

கடந்த ஏழு வருடங்களாக வடமராட்சி வல்லிபுரக் கோயிலின் தெற்கு வீதிப் பகுதியில் நிலைகொண்டிருந்த படையினர் அவ்விடத்திலிருந்து விலக்கப்பட்டு பல்லப்பை இராணுவ முகாமுடன் இணைக்கப்பட்டுள்ளனர்.

ஆலய தெற்கு வீதியில் அமைந்திருந்த மடங்களிலிருந்து படையினர் வெளியேறியதையடுத்து அவை பொதுமக்களின் பாவனைக்கு விடப்பட்டுள்ளன.

வல்லிபுரக் கோவில் ஊடாகச் செல்லும் வீதியில் அமைக்கப்பட்டிருந்த சோதனைச்சாவடியில் தற்போது பொலீஸாரும் படையினரும் கடமையில் உள்ளனர்.

இதேவேளை, எழுதுமட்டுவாழ் கரம்பகம் பகுதியிலிருந்து படையினர் தமது உடைமைகளை வாகனங்களில் ஏற்றிச்செல்வதைக் காண முடிந்ததாகக் கூறப்படுகிறது.(ஒ-117)

## ஒட்டகப்புலம் மாதா ஆலயத்தில் 12 ஆண்டுகளின் பின் திருவிழா

யாழ்ப்பாணம்,மே29

பன்னிரண்டு வருடங்களின் பின்னர் வசாவிளான் ஒட்டகப்புலம் அமலோற்ப மாதா ஆலயத்தில் வருடாந்தத் திருநாளைக் கொண்டாட படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிமுதல் கூட்டுத் திருப்பலி, திருச்சொருப ஆசீர் ஆகியன குருமுதல்வர் ஜே.பி.ஈ. செல்வராசா அடிகள் தலைமையில் ஆலயத்தில் நடத்தப்படவிருக்கின்றன.

இந்த நிகழ்வுகளில் பங்குபற்றும் பக்தர்கள் அன்று காலை 7.30 மணிக்கு அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயத்தில் இருந்து பவனியாக அழைத்துச் செல்லப்படுவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)


**சுடர் ஒளி** மே28 – ஜூன்03 இதழில்..!

- யாழ். நாகவிகாரை நிமிர்ந்தது திருமலை விநாயகர் பாவம்
- அன்னை இட்ட தீயில் எரிந்த ஆபாசப்படப் பிரதிகள்
- தவிர்க்க முடியாததாகிவிட்ட அமெரிக்கத் தலையீடு!
- ஈழத் தமிழர்கள் நம்பிக் கெட்டது இராமநாதன் காலத்திலே ஆரம்பம்
- பொதுமக்களை அழைத்து பயம் காட்டும் படையினர்
- ஒரு பாதாள உலகக் கோஷ்டி தலைவனின் பரிதாப முடிவு
- மற்றும் சினிமா, இணையத் தளங்களிலிருந்து, இளஞ்சுடர், மருத்துவ கேள்வி பதில், பெண், விளையாட்டுச் செய்திகள், சிறுகதை, தேரடி அரட்டை என வழமையான அம்சங்கள். (C/22319)


## அதிதி பேச்சாளர் தினம்

யாழ்ப்பாணம்,மே29

யாழ். றோட்டறிக் கழகம் நடத்தும் அதிதி பேச்சாளர் தின நிகழ்வு நாளை வியாழக்கிழமை மாலை 4.45 மணிக்கு 'உதயன்' பணிமனை கேட்போர் கூட்டத்தில் இடம்பெறவுள்ளது.

செலான் வங்கி யாழ். கிளை முகாமையாளர் கே.கனகசிங்கம் 'செலான் வங்கியின் யாழ்ப்பாணப் பணிகள்' என்றும் தலைப்பில் உரையாற்றுவார். (ஐ-3)

## கல்வி அதிகாரிகள் கூட்டம் 31இல்

யாழ்ப்பாணம்,மே29

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் கே.சண்முகலிங்கம் கலந்துகொள்ளும் கூட்டம் ஒன்று எதிர்வரும் 31ஆம் திகதி வெளளிக்கிழமை காலை 9 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் யாழ்.மாவட்டத்தின் ஐந்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் கல்வித் திணைக்கள பொறியியலாளர், கணக்காளர் ஆகியோரைத தவறாது கலந்துகொள்ளுமாறு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் சி.சிவராஜா கேட்டுள்ளார். (க-10)

## பாசையூரில் பக்தர்கள் பாவனைக்கென மலசலகூடம்

கொழும்புத்துறை,மே29

பாசையூர் புனித அந்தோனியார் ஆலய பங்குப்பணிமனை வளவில் இரண்டு லட்சம் ரூபா செலவிலான மலசலகூடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

ஆறு கழிவறைகளைக் கொண்ட இம்மலசல கூடத்தொகுதி செவ்வாய்க்கிழமைகளிலும் மற்றும் திருவிழாக் காலங்களிலும் ஆலயத்திற்கு வரும் பக்தர்களின் வசதி கருதி அமைக்கப்படுவதாக பங்குத்தந்தை அருட்திரு யேசுரட்ணம் அடிகள் தெரிவித்தார். (க-ரி)

# தமிழாசிரியர் எதிர்நோக்கும் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

## பிரதமர் ரணில் உறுதி

கொழும்பு,மே29

தமிழ்மொழி மூல ஆசிரியர்களின் பிரச்சினைகளுக்கு விரைவிலே உரிய தீர்வு காணப்படும்.

இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வடக்கு - கிழக்கில் நடத்திய சுகவீன விடுமுறைப் போராட்ட தினத்தன்று நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் ஆசிரியர்களின் பிரச்சினைகளை பிரதமரின் கவனத்துக்குக் கொண்டு வந்ததாகவும் -

தமிழர் ஆசிரியர் சங்கத்தினரின் கோரிக்கைகளைக் கவனத்தில் கொண்ட பிரதமர், அது தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு தனது செயலாளர் பிரட்மன் வீரக்கோனுக்கு தெரிவித்ததுடன் உடனடியாக ஆசிரியர் சங்கத்துடன் பேசி தீர்வுக்கான நகலை தயாரிக்குமாறு கல்வி அமைச்சருக்கு அறிவித்துள்ளதாகவும் -

பிரதமர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-13)

## கையெழுத்து சஞ்சிகைப் போட்டி

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித்திணைக்களத்தால் மாணவர்களின்கலை, இலக்கியத்திறன், ஆக்கத்திறன் ஆற்றல்களை வளர்க்கும் பொருட்டு, கையெழுத்து சஞ்சிகைப் போட்டி இவ்வருடமும் நடத்தப்படவுள்ளது.

வலய மட்டம், மாகாண மட்டங்களில் தெரிவு செய்யப்படும் முதல் மூன்றுகையெழுத்து சஞ்சிகைகளுக்கு பரிசுகள் வழங்கப்படும்.

பாடசாலை மட்டத்தில் ஜூன் 30 ஆம் திகதிக்குள்ளும் வலய, மாகாண மட்டங்களில் முறையே ஜூலை 31, ஓகஸ்ட் 31 ஆம் திகதிகளுக்குள்ளும போட்டி நடைபெறும். (க-152)

# வாசகர் திருமுகம்

## பக்கச்சார்பின்றி ஆசிரிய நியமனங்களை வழங்குக!

சேவை என்பது பொழுது போக்குக்காகச் செய்யப்படும் ஒன்றல்ல. எங்கே சேவைக்கான தேவையுள்ளதோ, அங்கு செய்யப்படுவதே உண்மையான - இதயபூர்வமான சேவையாகும்.

அண்மையில் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சியை முடித்து வெளியேறிய ஆசிரியர்கள், நியமிக்கப்பட்டுள்ள முறையை அவதானிக்கும்போது சில கசப்பான உண்மைகள் தெரியவருகின்றன.

சமூகரீதியான பக்கச்சார்புக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு தரமான மற்றும் பின்தங்கிய பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந் நடைமுறை கடந்த சில ஆண்டுகளாக கைக்கொள்ளப்படுவதாகக் கூறப்படுகிறது.

ஆசிரிய சேவை என்பது சமூக உயர்வு, தாழ்வுகளுக்கு அப்பாற்பட்ட ஒரு புனிதமான கைங்கரியமாகும். சேவை செய்யும் தொழிலைப் புனிதமாகவும், சேவையை எதிர்பார்க்கும் மக்களை தெய்வங்களாகவும் கருதுவோர் போற்றுதற்குரியவர்கள்.

ஆனால் இப்படி, அப்படி என்று எப்படியோ தரமான பாடசாலைகளில் நியமனம் பெற்றுக்கொண்ட ஆசிரியர்கள் சிலர், போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து - ஆசிரியச் சேவைக்குள் புகுந்த எம்மைப் பார்த்து மனனப்படுத்திப் பேசும் பேச்சுக்களைக் கேட்கும்போது, சிரிப்பதா அழுவதா என்று தெரியவில்லை. பொழுது போக்குவதற்காக, 'கும்பலில் கோவிந்தா' போட்டுக்கொண்டு ஆசிரியத் தொழிலுக்குள் வந்த இவர்களுக்கு எம்மை 'நையாண்டி' செய்வதற்கு எந்தவித அருகதையும் கிடையாது.

நியமனங்களைத் திட்டமிடும் திணைக்கள அதிகாரிகள் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். எமது இனம் இன்று 'தமிழ்தேசியம்' என்ற குடையின் கீழ் ஒன்றுபட்டு குறித்த இலக்கை நோக்கி வீறுநடைபோட்டுக் கொண்டிருக்கிறது. இந்தக் கட்டுக்கோப்பான வரலாற்றுச் சந்தர்ப்பத்தில் - ஆசிரிய நியமனத்தில் உங்கள் உடம்போடு ஒட்டிக்கொண்டுள்ள ஆசிங்கங்களை வாந்தி எடுத்துக் கொள்ளாதீர்கள்! தவறுகளை திருத்திக் கொள்ளுங்கள்! தவறின், வரலாற்றுக்கரங்களால் நீங்கள் தண்டிக்கப்படுவதும் தவிர்க்க முடியாததாகிவிடும்.

*கரவெட்டி.* - **ஓர் ஆசிரியர்**

## பிரதேச செயலக ஊழியர்கள் 'ஓலம்'

1987ஆம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழ் மாகாண சபை ஸ்தாபிக்கப்பட்டு 13ஆவது அரசமைப்புச் சீர்திருத்தத்தின் கீழ் அதற்கான அதிகாரங்கள் வழங்கப்பட்டன. அப்போது மாவட்ட நிர்வாகங்களில் அரச அதிபர்களுக்குள்ள அதிகாரங்கள் பலவும் குறைக்கப்பட்டு அவை மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டன. பின்னர் படிப்படியாகப் பல அதிகாரங்கள் மத்திய அரசினால் மீளப்பெறப்பட்டு வருகின்றன.

இலங்கையில் வடக்கு - கிழக்கு மாகாண சபையைத் தவிர ஏனைய மாகாண சபைகள் யாவும் அரசியல் தலைமையின் கீழ் இயங்குகின்றன. ஆனால் வடக்கு - கிழக்கு மாகாண சபையோ அதிகாரிகளின் வழிகாட்டலில் இயங்குகின்றது.

வடக்கு - கிழக்கு மாகாணசபையை எடுத்துக்கொண்டால், பொது நிர்வாக அமைச்சை பொறுத்தவரை வருடாந்தம் இடமாற்ற விண்ணப்பங்களைக் கோரி - கட்டளைகளை அனுப்பி வருகிறது. ஆனால் இது தொடர்பாகச் செய்யப்படும் மேன்முறையீடுகளை மாகாணசபை கவனத்தில் கொள்வதில்லை. நிதி ஏற்பாடுகளைப் பொறுத்தவரையில், பிரதேச செயலகங்களில் கடமைபுரியும் ஊழியர்களுக்கான சம்பளக்கொடுப்பனவு மற்றும் பல்வேறு கடன் தொடர்பான நிதி ஏற்பாடுகள் சபையால் தற்போது கையாளப்படுவதில்லை.

பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் ஊழியர்களுக்கான சம்பளக் கொடுப்பனவு மற்றும் பல்வேறு படிகளை வழங்குவதற்கான நிதி ஏற்பாடுகள் போன்றவையும் தற்போது யாழ்.மாவட்ட (மத்திய அரசு) அரச அதிகாரிகளினாலேயே மேற்கொள்ளப்படுகிறது.

இந்நிலையில் பிரதேச செயலகங்களிலில் கடமையாற்றும் ஊழியர்களுக்கான பல்வேறு கடன்களை வழங்குவதற்கான நிதி ஏற்பாடுகள் எதுவும் இல்லையென யாழ்.மாவட்ட அரச அதிகாரிகளினால் தெரிவிக்கப்படுகிறது.

பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் ஊழியர்களுக்கான கடன் வழங்குவதற்கான நிதி ஏற்பாடுகள், நிர்வாக விடயங்களைக் கையாளும் வடக்கு - கிழக்கு மாகாண பொது நிர்வாக அமைச்சிடமும் இல்லை. நிதி விடயங்களைக் கையாளும் மத்திய அரசிடமும் இல்லை. இவற்றினால் சிரமப்பட்டுக் கொண்டிருப்பவர்கள் பிரதேச செயலக ஊழியர்களே!

எனவே இவ்வூழியர்கள் ஒன்றில் மாகாணசபையின் அல்லது மத்திய அரசின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்படுதல் அவசியமாகும்.

இந்த ஊழியர்களின் நிலையை யாழ்.மாவட்ட அரச அதிகாரிகளும், வடக்கு, கிழக்கு மாகாண சபை பொதுநிர்வாக அமைச்சு அதிகாரிகளும் தெளிவுபடுத்துவார்களா?

*கோப்பாய்.* **ஆர்.சின்னப்பு.**

# குட்டிக் குட்டிக் கணனி

இது 21ஆம் நூற்றாண்டு. இதில் நவீனங்களுக்கு மட்டுமே முதலிடம். அதில் கணனிக்கு அதிக முக்கியத்துவம். விதம்விதமான கணனிகள் இப்போது உருவாகின்றன. அண்மையில் ஆடையாக அணிந்து கொள்ளக்கூடிய கணனி ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் சூடு ஆறுமுன் இப்போது மற்றுமொரு அதிநவீன கணனி விற்பனைக்கு வந்துள்ளது.



இதன் பெயர் பாம்(Palm computer) உங்கள் உள்ளங்கையளவே இது இருக்கும். உலகம் முழுமையையும் உங்கள் கைகளில் அடக்கும் அதிசக்திவாய்ந்த திறன் உள்ளது இது. இதனுடன் தொடர்புடைய இன்னொரு விசேடம் என்னவெனில் இதன் கீ -போர்ட் (விசைப்பலகை) துணியால் ஆனது.

அதாவது இந்த 'பாம்' கணனியின் கீ-போர்ட் ஒரு வகையான துணியினால் ஆனது. ஆனால் சாதாரண கீ-போர்ட் செய்யும் அத்தனை காரியங்களையும் இதுவும் செய்யும். ஐரோப்பியப் பொறியியலாளர்கள் இருவர் இதனை உருவாக்கியுள்ளார். இதற்கு 'லொஜிடெக்' என்று பெயரிடப்பட்டுள்ளது. துணி மற்றும் ரப்பர் கலந்து இது செய்யப்பட்டுள்ளது.




இதனை சுலபமாக மடித்து உங்கள் பொக்கெற்றில் வைத்துக்கொள்ளலாம்(ஆண்களின் ஜீன்ஸ் பின் பொக்கற்றில் வைக்கலாமா என்பது எங்களுக்குத் தெரியாது).

இந்த பாம் கணனியையும் லொஜிடெக் கீ-போர்ட்டையும் எடுத்துச்செல்வது படுசுலபம். எந்த இடத்திலும் இதனைப் பயன்படுத்தலாம்.

மொபைல் போன், இன்ரர் நெற் போன்ற தகவல் தொழில்நுட்ப சாதனங்களை அதிகம் பயன்படுத்துவோருக்கு இந்த பாம் கணனி ஒரு வரப்பிரசாதம் என்று கூறப்படுகிறது. இதன்செயற்றிறனுக்கு ஏற்ப பல விலைகளில் கிடைக்கிறது.

# குளோனிங் குளறுபடி

குளோனிங் எனப்படும் பிரதியாக்கல் முறை மூலம் ஆடு, மாடுகளை உருவாக்கும் முறை கண்டுபிடிக்கப்பட்டு நீண்ட காலமாகிவிட்டது. இப்போது சில நாடுகளில் மனிதனைக் குளோனிங் மூலம் உருவாக்குவதற்கும் முயற்சிகள் செய்யப்படுகின்றன.



பிரேஸிலில் உள்ள சாவோ பவுலோ பல்கலைக்கழகத்தில் குளோனிங் தொடர்பான ஆய்வுகள் இடம் பெற்று வருகின்றன. குளோனிங் மூலம் பிறக்கும் உயிரினங்கள் வயதாகும் போது ஏற்படும் குரோமோசோம் மாற்றங்கள் குறித்து இங்கு ஆய்வு நடத்தத்திட்டமிடப்பட்டது.

இதற்காக - பசு ஒன்றின் காதில் இருந்து எடுக்கப்பட்ட 'செல்' மூலம் ஆண் மற்றும் பெண் கருமுட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டு குளிர்சாதனப் பெட்டியில் பத்திரப்படுத்தப்பட்டன. பின்னர் அவை மூன்று பசுக்களின் வயிற்றில் வைத்து வளர்க்கப்பட்டன. இரு காளைக் கன்றுகளையும் ஒரு பசுக் கன்றையும் உருவாக்குவதே விஞ்ஞானிகளின் திட்டம்.

ஆனால் பசுக் கன்றை உருவாக்கும் நோக்கத்துடன் கரு செலுத்தப்பட்ட மாடு இறுதியில் காளைக் கன்றை ஈன்றது. விஞ்ஞானிகள் அதிர்ச்சியடைந்தனர். குளோனிங் கிலேயே குளறுபடியாக என்று அதிர்ந்து போனார்கள் விஞ்ஞானிகள்.

கோளாறு எங்கே என்று ஆராய்ந்த போது பலரும் பலதையும் சொன்னார்கள். கரு முட்டையைச் செலுத்துவதற்கு முன்னர் குறிப்பிட்ட பசு வேலி தாண்டி வேறு காளையுடன் சேர்ந்திருக்கலாம் என்றார்கள். இதனை அடுத்து அது உண்மைதானா என்று அறிய கன்றுக்கு டி.என்.ஏ சோதனை நடத்தப்பட்டது.

சோதனை மற்றும் ஆய்வின் முடிவில் ஆய்வுக் கூடத்தில் ஏற்பட்ட கரு மாற்றம்தான் இத்தனை குழப்பத்துக்கும் காரணம் என்று தெரியந்தது. குளிர்சாதனப் பெட்டியில் வைத்திருந்த கரு முட்டைகளில் பெண் கரு முட்டைக்குப் பதிலாக ஆண் முட்டையை குறிப்பிட்ட பசு வயிற்றில் வைத்ததே இத்தனை குழப்பத்துக்கும் காரணம்.


அப்படியானால் குளோனிங் மனிதனை உருவாக்கும்போது வேறு ஏதாவது முட்டையை வைத்துவிட்டால் .........?

தயாரிப்பு: கனிமொழி

# அட! அப்படியா!!

## அறுகம்புல் ரொட்டி

நம் ஊர்களில் காடாக வளர்ந்து போய்க்கிடக்கும் அறுகம் புல்லை என்ன செய்கின்றோம்; மார்கழி மாதம் கோலம் போட்டு அதில் வைக்கும்



சாணிப் பிள்ளையாரின் தலையில் செருகுகின்றோம். வேறு ஏதாவது உருப்படியாகச் செய்கிறோமா?

ஜேர்மனியில் இந்த அறுகம்புல்லைச் சேர்த்து ரொட்டி தயாரிக்கிறார்கள். அங்கு அறுகம்புல் சேர்த்த ரொட்டியின் விலை சாதாரண ரொட்டி விலையை விட அதிகம்.

அறுகம்புல்லை பிரித்து ஆராய்ந்ததில் அதில் இருநூறுக்கு மேற்பட்ட உயிர்ச்சத்துக்கள் (விற்றமின்கள்) இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதனால்தான் ஜேர்மனில் அறுகம்புல் ரொட்டிக்கு அந்த மதிப்பு.

அதற்காக நீங்கள் வீதியோரத்தில் உள்ள அறுகம்புல்லைப் பிடுங்கி வாயில் போட்டு விடாதீர்கள்.

## ஐரோப்பாவிலும் பாம்புக்கறி

புழு, பூச்சி, பிராணிகளை உண்பது சீனர்களுக்கு பிடித்தமான சாமாச்சாரம்(பொதுவாக மலாயர்களுக்கு பிடித்த விடயம்). ஆனால் இப்போது மேற்கு நாடுகளிலும் இந்த கலாசாரம் பரவத் தொடங்கியுள்ளது.



அங்கும் புழு,பூச்சி, பாம்பு என்று அனைத்தையும் பொரித்தும் வறுத்தும்,சமைத்தும் உண்ணத் தொடங்விட்டார்கள். இதற்கென தனியான கடைகள் அங்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த வித்தியாசமான உணவுகளை ருசித்து உண்பதற்கு பெரும் கூட்டம் கூடுகிறதாம்.

இவற்றைச் சமைப்பதற்கென சீனாவிலிருந்து விசேட சமையற்காரர்கள் ஐரேரப்பாவுக்கு அழைக்கப்படுகிறார்கள். அவர்கள் பாம்புக் கறி, கரப்பான் பூச்சிப் பொரியல், வைனில் ஊறவைத்த தேள், தவளை சூப் என்று ஏகப்பட்ட அயிட்டங்களை உருவாக்கி ஐரோப்பியர்களுக்கு வழங்குகிறார்கள்.



## மினி உலகக் கோப்பை

உலகக் கோப்பை உதைபந்தாட்டம் ஆரம்பிக்க இன்னும் ஒருநாளே இருக்கின்றது. உலகெங்கும் இருந்து உதைபந்தாட்ட ரசிகர்கள் தென் கொரியா மற்றும் ஜப்பானில் குவிந்தவண்ணம் இருக்கிறார்கள்.

உலகக் கிண்ணப் போட்டியில் வெற்றிபெற்ற அணிக்கு வழங்கப்படும் வெற்றிக் கிண்ணம் 36 செ.மீ. உயரமும் 4.9 கிலோ கிராம் எடையும் கொண்டது. இதன் மதிப்பு சுமார் 220 கோடி ரூபாய் ஆகும். ஏனெனில் அந்தளவு தொகைக்குத்தான் அந்த வெற்றிக் கிண்ணம் காப்புறுதி செய்யப்பட்டுள்ளது.

நீங்கள் படத்தில் பார்ப்பதும் உலகக் கோப்பை வெற்றிக் கிண்ணந்தான். ஆனால் உண்மையானது அல்ல; அதன் மாதிரிகள். தென்கொரியத் தலைநகர் சியோலில் உள்ள நகைக் கடை ஒன்றில் இந்த மாதிரிகள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. 24 கரட் தங்கத்தில் செய்யப்பட்ட இவை ஒவ்வொன்றும் 8 செ.மீ உயரமும் 100 கிராம் எடையும் கொண்டவை. ஒன்றின் விலை நம்மூர் மதிப்பில் சுமார் 4லட்சம் ரூபாய்கள்.



★ ★ ★

# உளவு பார்க்கும் எலி!

சில மந்திரவாதக் கதைகள் நீங்கள் கேள்விப்பட்டு இருக்கலாம். ஒருவரை வேவு பார்க்க வேண்டும், அதற்கு ஆள்களை நேரடியாக அனுப்பமுடியாது. அவ்வாறு அனுப்பினால் மற்றவர்கள் அவரை அடையாளம் கண்டுபிடித்து விடுவார்கள். அதனால் ஆள்களை பூனையாகவோ அல்லது நாயாகவோ மாற்றி, உளவு பார்க்க வேண்டியவரிடம் மந்திரவாதி அனுப்பிவைப்பார். அது அவ்வப்போது வேவுபார்த்து, தனது எஜமானருக்குத் தேவையான செய்தியை அனுப்பிவைக்கும். இது உண்மை வாழ்க்கையில் நடக்கக்கூடியதா என்று நாம் யோசித்திருக்கலாம். இப்போது இது நடைமுறை உண்மையாகி இருக்கிறது.

அமெரிக்காவில் உள்ள புரூக்ளின் நகரத்தில் நியூயோர்க் ஸ்டேட் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர்கள் இந்த சாதனையை நிகழ்த்தி இருக்கிறார்கள். அந்த பல்கலைக் கழகத்தில் உள்ள உடலியல் மற்றும் மருந்தியல் துறையை (Physiology and Pharmocology Dept.) சார்ந்த ஜோன் சேபின் (John Chapin) என்பவர் தலைமையில் இந்த சாதனை நடந்துள்ளது.




இவர் தலைமையிலான ஒரு குழு, தனது பரிசோதனைக்கு ஐந்து உயிரோடு உள்ள எலிகளை எடுத்துக் கொண்டது. இந்த எலிகளின் மூளைக்குள் மின்னணுத் தண்டுகள் (Electrodes) பொருத்தப்பட்டன. மொத்தம் மூன்று மின்னணுத் தண்டுகள் பொருத்தப்பட்டன.

எலியை வலது பக்கம் ஓடத் தூண்டும் மூளையின் பகுதியில் ஒரு தண்டு, இடது பக்கம் ஓடத்தூண்டும் மூளையின் பக்கம் மற்றொரு தண்டு, எலிக்கு மகிழ்ச்சி ஊட்டுகிற அல்லது மகிழ்ச்சியைத் தூண்டுகிற மூளைப் பகுதியில் ஒரு தண்டு என்று மின்னணுத் தண்டுகள் பொருத்தப்பட்டன.

இந்த மூன்றாவது தண்டு எதற்கு என்பதைப் பின்னால் பார்க்கலாம்.

பிறகு இந்த எலிகளின் உடலோடு ஒரு சிறிய பை பொருத்தப் பட்டது. இந்தப் பையில் ஒரு ரேடியோ ரிசீவர் மற்றும் மின்சக்தி தரும் பற்றரி வைக்கப்பட்டது. இந்த ரேடியோ ரிசீவருக்குத் தூரத்தில் இருந்து ஒரு கணனி மூலம் ஆராய்ச்சியாளர்கள் கட்டளைகள் அனுப்பலாம்.



அந்த கட்டளைகளை ரேடியோ ரிசீவர் வாங்கி, எலியின் மூளைக்குள உள்ள மின்னணுத் தண்டுகளுக்கு அனுப்பிவைக்கும்.

கணனியில் இருந்து எலியை அது இருக்கும் இடத்திலிருந்து வலது பக்கமோ அல்லது இடது பக்கமோ திருப்பி ஓடச் சொன்னால் அது ஓடும். அவ்வாறு நமது கட்டளைகளைக் கேட்டு அது ஓடுவதற்கு அதற்கு ஏதாவது 'லஞ்சம்' கொடுக்க வேண்டாமா? அதற்குத்தான் நாம் மேலே சொன்ன மூன்றாவது தண்டு. அந்தத் தண்டு எலி நாம் சொன்னபடி ஓடினால் அதற்கு மகிழ்ச்சி ஊட்டும் பகுதியை அதனுடைய மூளையில் தூண்டும். அது எலிக்கு இன்பம் அளிப்பதாக இருக்கும். அதனால் எலி அந்த இன்பத்தை அனுபவிப்பதற்காக நாம் கொடுத்த கட்டளைப்படி வலது பக்கமோ அல்லது இடது பக்கமோ ஓடும்.




இதனால் என்ன இலாபம் என்று கேட்கலாம். ஆதாயம் இல்லாமலா ஆராய்ச்சி நடக்கும்? ஓர் இடத்தில் ஒரு பெரிய கட்டடம் இடிந்து விழுகிறது என்று வைத்துக் கொள்வோம். கட்டட இடிபாடுகளில் பலர் சிக்கிக் கொள்ளலாம். அப்போது இடிபாட்டில் யாராவது சிக்கியிருக்கிறார்களா? அவர்கள் உயிருடன் இருக்கிறார்களா? என்று பார்க்கவேண்டிய அவசியம் இருக்கிறது. ஆனால் இடிபாட்டிற்கிடையில் நம்மால் நுழைய முடியாமல் இருக்கலாம். அப்போது என்ன செய்வது?

இதற்கு எலிகள் போன்ற சின்ன உருவ பிராணிகள் பயன்படும். எந்த ஒரு சிறு துவாரத்திலும் எலியால் புக முடியும் நுழைந்தால் மட்டும் போதுமா? நாம் சொல்லுகிறபடி குறிப்பிட்ட பக்கம் அது ஓடவேண்டும். அதுமட்டுமல்ல அது நமக்குத் தேவையான செய்திகளை அனுப்பி வைக்கவேண்டும்.

இதற்கு ஆராய்ச்சியாளர்கள் எலிகளோடு ஒரு மிகச்சிறிய வீடியோ கமராவை இணைக்க முயற்சிக்கிறார்கள் இந்த கமரா மூலம் நமக்கு இடிபாடுகளில் சிக்கி இருப்பவர்கள் பற்றித் தகவல்கள் கிடைக்கும்.

இந்த எலிகள் உயிருள்ள எலி

(10ஆம் பக்கம் பார்க்க)

## எல்லைப்புற மோதல்களில்

# 230 பாக். வீரரைக் கொன்றதாக கூறுகிறது இந்திய இராணுவம்

லண்டன்,மே29

இந்திய, பாகிஸ்தானிய எல்லையில் கடந்த இரண்டு வாரகாலமாக இடம்பெற்றுவரும் மோதலில் 230இற்கும் அதிகமான பாகிஸ்தானியப் படையினரைத் தாம் கொன்றுவிட்டதாக இந்திய இராணுவம் கூறுகிறது. பாகிஸ்தானியத் துருப்புகளின் பல பதுங்கு குழிகளையும் தாம் அழித்துவிட்டதாக இந்தியப் படை கூறுகிறது.

ஆனால், இதனை மறுத்த பாகிஸ்தானிய இராணுவம் எல்லைக்கட்டுப்பாட்டுக் கோட்டில் பரஸ்பரம் மேற்கொண்டுவரும் தாக்குதலில் தமது தரப்பில் சேதங்கள் ஏற்பட்டுள்ள போதும், இந்தியா கூறுவதுபோன்ற பாரிய உயிர்ச் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை என்று தெரிவித்தது.

இதற்கிடையில், இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையே உருவாகியுள்ள பதற்ற நிலையைத் தணிக்கும் முயற்சியில் ஈடுபடும் நோக்கில் பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் ஜக்ஸ்ரோ, பாகிஸ்தான் சென்றடைந்துள்ளார். அங்கு அவர் பாகிஸ்தானிய அதிபர் ஜெனரல் பர்வேஷ் முஷாரபை சந்தித்துப்பேசினார். பின்னர் அவர் இந்தியா சென்று இந்தியப் பிரதமர் வாஜ்பாயுடன் பேச்சு நடத்துவார்.

இந்திய, பாகிஸ்தான் பதற்ற நிலை கவலை அளிப்பதாகவும் -

### உலக அரங்கில்

கருத்து வேற்றுமைகளைத் தீர்த்துக்கொள்ள இராணுவ நடவடிக்கைகளைத் தவிர்த்து இராஜதந்திரத்தைப் பயன்படுத்தும்படி இந்தியாவையும் பாகிஸ்தானையும் ஜப்பானிய வெளியுறவு அமைச்சர் யோரிகோ கவாகுஷி கேட்டுள்ளார். (ஒ)

# 60 தீவிரவாதிகள் நேபாளத்தில் பலி!

காத்மண்டு,மே29

நேபாளத்தில் அவசரகால நிலைமை நேற்றுமுன்தினம் மீண்டும் நடைமுறைப்படுத்தப்பட்ட சில மணித்தியாலங்களில் நேபாள இராணுவத்தினர் சுமார் 60 தீவிரவாதிகளைச் சுட்டுக்கொன்றுள்ளனர்.

தலைநகர் காத்மண்டுவில் இருந்து 500 கிலோ மீற்றர்கள் மேற்கே ருக்கும் மாவட்டத்தில் காரா பகுதியில் உள்ள இராணுவ நிலையை நேற்று முன்தினம் இரவு தீவிரவாதிகள் தாக்கியதாகவும் - அப்போது நிகழ்ந்த மோதலிலேயே தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில், நேபாள நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு எதிர்வரும் நவம்பர் மாதம் தேர்தலை அறிவித்ததற்கான காரணத்தை தெரிவிக்குமாறு நேபாளப் பிரதமருக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

முன்னதாக, தீவிரவாதிகளுக்கு எதிராகப் போதிய நடவடிக்கைகளை எடுக்க பிரதமர் தவறிவிட்டார் என்று கூறி டியூபாவுக்கு எதிராக நாடாளுமன்றில் எதிர்ப்புக் குரல்கள் வலுத்துவந்தன. இதனை அடுத்து நாடாளுமன்றைக் கலைத்துவிடுமாறு பிரதமர் மன்னர் ஜியானேந்திராவுக்குப் பரிந்துரை செய்தார். அதனை ஏற்ற மன்னரும் நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டார்.

இப்போது, நாடாளுமன்றத்தைக் கலைத்தது அரசியல் சட்டத்துக்கு எதிரானது. மாற்று அரசு அமைக்க வாய்ப்பு இருக்கும்போது நாடாளுமன்றைக் கலைத்தது பாரபட்சமானது எனத் தெரிவித்து 3 சட்டத்தரணிகள் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

நாடாளுமன்றைக் கலைத்ததை ரத்துச்செய்து, அதனை மீண்டும் செயற்பட அனுமதிக்கவேண்டும் என்றும் அவர்கள் தமது மனுவில் கோரியுள்ளனர். (ம)

### மொஸ்கோவில் 'நேட்டோ' பணிமனை

ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் 'நேட்டோ' கூட்டமைப்பு தனது இராணுவப் பணிமனையை திறந்து வைத்துள்ளது. ரஷ்யாவில் 'நேட்டோ' பணிமனை ஆரம்பிக்கப்படுவது இதுவே முதற்றடவையாகும்.

'நேட்டோ' நாடுகள் அமைப்புக்கும், ரஷ்யாவுக்கும் இடையில் கூட்டுறவு உடன்படிக்கை நேற்று ரோம் நகரில் கைச்சாத்திடப்பட்ட வேளையில் இந்தப் பணிமனை திறக்கப்பட்டுள்ளது.

திறப்பு விழா வைபவத்தில் உரையாற்றிய 'நேட்டோ' மற்றும் ரஷ்ய அதிகாரிகள், பூகோள ரீதியிலான பாதுகாப்புக்காக தாம் ஒன்றுபட்டு உழைக்கப்போவதாக உறுதி தெரிவித்தனர்.

ரஷ்ய மொழியில் எழுதப்பட்ட 'நேட்டோ' அகராதி ஒன்று மொஸ்கோ அலுவலக ஊழியர்களுக்கு வழங்கப்பட்டது. (ஓ-4)

# விமானப் படையையே இந்தியா பாக். போரில் பயன்படுத்தும்


பாகிஸ்தானுடன் போர் மூளுமானால் தனது விமானப் படையையும், அதன் அதிநவீன கருவிகளையுமே அதிகளவில் பயன்படுத்தும் வகையில் இந்தியா திட்டம் வகுத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் உள்ள ஆசாத் காஷ்மீர் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் தீவிரவாத நிலைகள் மற்றும் பயிற்சி முகாம்கள் ஆகியவற்றில் இலக்கு வைத்தே பாரிய தாக்குதலை மேற்கொள்ள இந்தியா எண்ணியுள்ளதாக இந்திய பாதுகாப்பு அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்தன.


இதற்கேற்ப இந்திய விமானப் படையினர், உலகின் மிக உயரமான இமயமலைப் பிராந்தியத்தின் பனி படர்ந்த மலைப் பகுதிக் குகைகளிலும், பதுங்கு குழிகளிலும் மறைந்துள்ள தீவிரவாதிகளைத் தாக்க பயிற்சிகளை மேற்கொண்டுள்ளதாகவும் -

தமது தாக்குதல் திட்டத்துக்கு 'தேமஸ் இமாஜின்' போன்ற நவீன கருவிகளையும், கணனி மயப்படுத்தப்பட்ட தாக்குத் திறன் உடைய பிரஞ்சுத் தயாரிப்பான மிராஜ் - 2000 மற்றும் ரஷ்யாவின் மிக் - 29 போர் விமானங்களையும் இந்தியா பயன்படுத்தவுள்ளதாகவும் -

தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)



செவ்வாய்க் கிரகத்தில் பனிப் படிமம் இருப்பது 'செவ்வாய் ஒடிஸீ' விண்கலம் எடுத்தனுப்பிய படங்களில் இருந்து தெரியவந்துள்ளது. இதனையடுத்து, அடுத்து வரும் 20 ஆண்டுகளில் செவ்வாயில மனிதன் காலடி வைக்கமுடியும் என்ற நம்பிக்கை வலுத்துள்ளதாக 'நாஸா' விண்வெளி ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது. செவ்வாயின் பின்னணியில் 'ஒடிஸீ' விண்கலத்தையும் செவ்வாயில் உள்ள பனிப் படிமத்தையும் படங்களில் காணலாம்.



# அமெரிக்காவுக்கு எதிராக அரபுலக மக்கள் எழுச்சி!

பலஸ்தீனர்களுக்கு எதிரான இஸ்ரேலின் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பது உட்பட அமெரிக்காவின் எதேச்சதிகாரப் போக்கை ஒடுக்க வளைகுடா நாடுகளில் மக்கள் இயகக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பலஸ்தீனருக்கு எதிரான அமெரிக்கப் போக்கைக் கண்டிக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அரபு மக்கள் தத்தமது நாடுகளின் அரசுகளிடம் கோரி வந்ததாகவும் -

ஆனால், வெறும் வாய்ப்பேச்சில் மட்டுமே பெரும்பாலான அரபு அரசுகள் அமெரிக்க எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும்-

இதனையடுத்தே, வீதி ஆர்ப்பாட்டங்கள், அமெரிக்கப் பொருள்களை பகிஷ்கரிக்கும் பிரசாரங்கள், வளைகுடாவில் அமெரிக்கத் தூதரகங்கள் மற்றும் இராணுவ நிலைகள் ஆகியவற்றை மூடிவிடும் கோரிக்கைகள் என அரபு மக்கள் நேரடி நடவடிக்கைகளில் இறங்கி உள்ளதாகவும் -

அரபுப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

இத்தனைக்கும் வளைகுடாவில் அமெரிக்க எதிர்ப்புக் கோஷம் அமெரிக்காவின் முக்கிய நட்பு நாடான பஹ்ரெய்னில் இருந்தே இப்போது முதலில் எழுந்தது. அமெரிக்காவின் ஐந்தாவது கடற்படைப் பிரிவு தற்போது பஹ்ரெய்னில் நிலை கொண்டுள்ள நிலையில், பெரும் எடுப்பில் அங்கு மக்கள் எதிர்ப்பு எழுந்துள்ளமை பஹ்ரெய்ன் அரசை தர்மசங்கடத்தில் ஆழ்த்தியுள்ளது.

இதேசமயம், வளைகுடா நாடுகளின் அரபு வீதிகள் எங்கும் அமெரிக்க, இஸ்ரேல் எதிர்ப்பு சுவரொட்டிகள் அண்மைக்காலமாக பெருமளவில் ஒட்டப்பட்டுள்ளதாக மனாமாவின் அக்பர் அல்கலீஜ் பத்திரிகை தெரிவித்தது.

இத்தகைய எதிர்ப்புப் போராட்டங்களுடன் மட்டும் நின்றுவிடாது அமெரிக்கப் பொருள்களைப் பகிஷ்கரிக்கும் நடவடிக்கைகளையும் அரபு மக்கள் முன்னெடுத்துள்ளனர். இந்த நடவடிக்கையே அமெரிக்காவுக்கு பெரும் சவாலாக அமையும் என்று கருதப்படுகிறது.

ஏனெனில், செல்வச் செழிப்புடன் திகழும் வளைகுடா நாடுகள் அமெரிக்கப் பொருள்களுக்கான பாரிய சந்தையாக விளங்குகிறது. அதிலும் அதிக லாபத்தை ஈட்டித்தரும் அமெரிக்க நிறுவனங்களின் குளிர்பானங்கள் உட்பட ஆடம்பரப் பொருள்கள் வளைகுடாவிலிருந்து அமெரிக்காவுக்கு பெரும் தொகைப் பணத்தைச் சேர்க்கின்றன. இந்த நிலையில் வளைகுடாவில் அமெரிக்கப் பொருள்களை பகிஷ்கரிக்கக் கோரும் அரபு மக்களின் செயற்பாடு தீவிரமடைந்துள்ளதுடன், அதற்கு ஆதரவும் பெருகி வருவது அமெரிக்கப் பொருளாதாரத்துக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாக பொருளாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர் அமெரிக்கப் பொருள்களை முற்றாகப் பகிஷ்கரிப்பதில் அரபு நாடுகளின் கல்விச் சமூகத்தினர், பொது அமைப்பினர் உட்பட பல மட்டத்தினரும் முழு மூச்சாக ஈடுபடத் தொடங்கி விட்டனர். இது அப்பிராந்தியத்தில் அமெரிக்காவுக்கு எதிராக முதல் தடவையாக மக்கள் புரட்சியொன்று வெடிக்கும் நிலையை உருவாக்கி உள்ளது.

துபாய் ஷார்ஜா பல்கலைக்கழகத்தின் உணவுச் சாலையில் அமெரிக்க பல்தேசிய நிறுவனங்கள் தயாரிக்கும் மென்பானங்களுக்கு முற்றாக மாணவர்கள் தடை விதித்து விட்டனர்.

துபாயில் அல்லது வேறு ஒரு மத்திய கிழக்கு நாட்டில் தயாரிக்கப்படும் மென்பானங்களே தற்போது அங்கு விற்பனை செய்யப்படுகின்றன.

இது தொடர்பாக, மேற்படி பல்கலைக்கழகத்தின் மாணவ தலைவி நவால் ஜஸீம் கூறுகையில் - 'அரேபியப் பணத்தில் வளரும் அமெரிக்கப் பொருளாதாரம் 50 வருடகாலமாக இஸ்ரேலிய ஆக்கிரமிப்பை எதிர்க்கும் பலஸ்தீனர்களை கொல்வதற்கு இஸ்ரேலுக்கு நிதியையும், இராணுவ உதவியையும் வழங்கவே பயன்படுகிறது. எங்களில் 10 கோடி முஸ்லிம்கள் உளளோம். நாங்கள் ஒவ்வொருவரும் அமெரிக்க மென்பானங்கள் உட்பட அந்நாட்டின் சகல உற்பத்திகளையும் பகிஷ்கரித்தால், அமெரிக்கப் பொருளாதாரம் எப்படிப் பாதிக்கப்படும் என்று நினைத்துப் பாருங்கள்' என்று கூறியுள்ளார்.

> ......வளமான வாழ்வில் ஊறிய மேற்கு நாட்டவரின் பொருளாதாரத்தை ஆட்டங்காண வைப்பதே அவர்களுக்குப் புகட்டும் நல்ல பாடம்......

அரபு நாட்டு அரசுகள் அமெரிக்கப் பொருள்களின் இறக்குமதியை உடனே முற்றாக நிறுத்திக்கொள்ளும என்று நாம் எதிர்பார்க்கவில்லை. ஆகவேதான் அந்தப் பணியை நாங்களே பொறுப்பேற்றுள்ளோம்' என்றும் ஜஸீம் கூறியுள்ளார்.

அமெரிக்கப் பொருள்களைப் பகிஷ்கரிக்கும் போராட்டம் குறித்து விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் அரபு ஊடகவியலாள்கள ஒன்றிணைந்து மாநாடு ஒன்றை ஏற்பாடு செய்துள்ளனர். அத்துடன் மேற்கொண்டு இது தொடர்பாகத் தமது துறையில் ஆக்கபூர்வ செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லவும் அவர்கள் உறுதி பூண்டுள்ளதாக 'அக்பர் அல் கலீஜ்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் ஐக்கிய அரபு இராஜஜியத்தின் ஊடகவியலாளர் சங்கம் வெளியிட்ட அறிக்கையில், அமெரிக்கப் பொருள்களைப் பகிஷ்கரிப்பதற்கென பொதுநல அமைப்புகள், சமூக நிறுவனங்கள் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் தேசியக் குழு ஒன்று அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

லெபனானில அமெரிக்க சிகரெட்டுகள் வாங்குவதைப் பெரும் எண்ணிக்கையானவர்கள் நிறுத்திவிட்டனர். அங்கு அமெரிக்க 'சிகரெட் பக்கெற்' ஒன்றின் விலை பலஸ்தீன மக்கள் மீது ஏவப்படும் ஒரு துப்பாக்கிக் குண்டின் விலைக்குச் சமமானது என்று லெபனானிய பல்கலைக்கழக மாணவர்கள் நாடு தழுவிய பிரசாரத்தில் ஈடுபட்டனர். இதன் பயனாக லெபனானில் வழக்கமாக விற்கப்படும் அமெரிக்க சிகரெட்டுகளின் அளவு 50 வீதம் குறைந்துவிட்டது.

ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தில் சந்தைப்படுத்தும் அதிகாரியாகப் பணியாற்றும் அனான் அல்ஸாபியக் கூறுகையில், 'இஸ்ரேல் குற்றச் செயல்களைப புரிய உதவி வரும் அமெரிககாவை அரபு மக்கள் பணியவைக்க வேண்டும். வளமான வாழ்க்கையில் ஊறிப்போன மேற்கு நாட்டவர்களுக்கு அவர்களது பொருளாதாரத்தை ஆட்டம் காண வைப்பதன் மூலமே நல்ல பாடம் புகட்டலாம்' என்று தெரிவித்தார்.

பகிஷ்கரிப்புப் போராட்டம் ஒரு புறம் தீவிரமடைந்து கொண்டிருக்க, அமெரிக்க நிலைகள் மீது மக்கள் தமது ஆத்திரத்தைக் காட்ட முயற்சித்து வருவதாகவும் கூறப்படுகிறது.

பஹ்ரெய்னில் ஒரு குழுவினர் அங்குள்ள அமெரிக்கத் தூதரக வளாகத்துக்குள் பலவந்தமாக நுழைந்து மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தில் தூதரகக் கட்டடத்தின் ஜன்னல் கண்ணாடிகள் உடைந்ததுடன், அங்கு நிறுத்தப்பட்டிருந்த 3 கார்கள் தீக்கிரையாகின.

இந்தச் சம்பவம், 'பலஸ்தீனர் தொடர்பான கொள்கையை அமெரிக்கா மாற்றிக்கொள்ளாவிட்டால் வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க நிறுவனங்களுக்கு ஆபத்து ஏற்படும்' என்று மன்னர் ஹமாத் பின் இஸா அல்கலிபா அமெரிக்காவை எச்சரிக்கும் அளவிற்கு நிலைமையை பாரதூரமாக்கியுள்ளது.

மொறொக்கோ, ஈராக் ஆகிய நாடுகளிலும் அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் உச்சக் கட்டத்தை எட்டியுள்ளன.

பலஸ்தீனர் மீதான இஸ்ரேலிய இராணுவ நடவடிக்கைகளை ஆட்சேபித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆயிரக் கணக்கான ஈராக்கிய மாணவர்களின் மத்தியில் உரையாற்றிய, அதிபர் சமாமின் 'பாத்' கட்சி பிரமுகர் ஹுதா கலேஹ் மெஹ்தி அமாஷ் ஆர்ப்பாட்டக் கோரிக்கைகளை செயல வடிவமாக்கும்படி அரபு மக்களைக் கேட்டுக்கொண்டார்.

இஸ்ரேலை ஆதரிக்கும் அமெரிக்க நிறுவனங்களை பகிஷ்கரிக்கும் வகையில் அரபு உணர்வுகளைத் தூண்டுமாறும் அமாஷ் கேட்டுள்ளதாக 'த கல்வ ருடே' என்ற பத்திரிகை தெரிவித்தது.

'அக்பர் அல் - அரப்' என்ற பத்திரிகை அதன் ஆசிரியத் தலையங்கத்தில், வளைகுடா நாடுகள் அவற்றின் பண மதிப்புகளை அமெரிக்க டொலருடன் ஸ்திரப்படுத்துவதை நிறுத்த வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளது.

இப்போது வளை குடாநாடுகளில பயன்படுத்தப்பட்டுவரும் அமெரிக்கப் பொருள்களுக்கு மாற்றான பொருள்களை மக்களுக்கு சிபாரிசு செய்வதற்காக தேசிய பகிஷ்கரிப்பு இயக்கம ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

உதயன்

## சமாதானத்துக்கு சவப்பெட்டி தயாரா?

கிழக்கில் பொதுமக்களை மிரட்டி அச்சுறுத்தும் செயல்களில் படையினர் - குறிப்பாக அதிரடிப் படையினர் - ஈடுபட்டு வருவதாகச் செய்திகள் வெளியாகி இருக்கின்றன.

அண்மையில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி ஒருவரைப் புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறி அரசுப் படைகள் கடுமையாகத் தாக்கிய சம்பவத்துக்குக கண்டனம் தெரிவித்து - தங்கள் ஆட்சேபத்தை வெளிப்படுத்தி - இரண்டு தினங்கள் ஹர்த்தால் அனுஷ்டித்தமைக்காக மக்களைப் பழிவாங்க அதிரடிப் படையினா முயற்சிப்பதாகக் கூறப்படுகிறது.

காரைதீவில் நிலைகொண்டுள்ள படையினர் அம்பாறையின் தமிழ்க் கிராமமான வீரமுனைக்குச் சென்று குடியிருப்பாளர்களை மிரட்டியிருக்கின்றனர். "ஆளுக்கு இரண்டு சவப்பெட்டிகளைத் தயாராக வைத்திருங்கள். இந்த மாத இறுதிக்குள் அவை உங்களுக்குத் தேவைப்படும்" என்று மக்களைப் பயமுறுத்தியிருக்கின்றனர். இதனால் வீரமுனைக் கிராம மக்கள் பதற்றமும் பீதியும் அடைந்திருக்கின்றனர்.

அரசு - புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கையைக கேள்விக்குள்ளாக்கும் வகையில் கிழக்கில் அரசுப் படைகள் பகிரங்கமாகச் செயற்படத் தொடங்கி இருப்பதை இச்சம்பவம் எடுத்துக்காட்டியிருக்கிறது.

அண்மைக்காலத்தில் அங்கு இடம்பெற்றுள்ள இது போன்ற பல சம்பவங்கள் சமாதானத்தை அவாவி நிற்கும் தமிழ்மக்களிடையே ஏமாற்றத்தையும் அச்ச உணர்வையும் ஏற்படுத்தியிருக்கின்றன.

பிதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சமாதான முயற்சிகள்மீது தமிழர் தலைமையும், தமிழ்மக்களும் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டுள்ளனர்.

புரிந்துணர்வு உடன்படிக்கையை நடைமுறைப் படுத்துவதில் பாதுகாப்புப் படையினர் பூரண ஒத்துழைப்பு வழங்குவதாகப் படைத் தளபதிகள் கூறுகின்றனர். அதுபோல படையினரில் பெரும் பகுதியினர் ஒத்துழைப்பை வழங்கியே வருகின்றனர். ஆனால், படையினரில் ஒருசாரார் - குறிப்பாகக் கிழக்கில் விசேட அதிரடிப் படையினர் - மாறாக நடக்கின்றனர். அவர்களின் செயற்பாடுகள் மக்களின் கஷ்டங்களை அதிகரிப்பதுடன் சமாதானத்துக்கு வேட்டு வைத்துவிடக கூடிய ஆபத்தான சூழ்நிலையைத் தோற்றுவிப்பதாய் உள்ளன. பகைமை உணர்வை எண்ணெய் ஊற்றி எரிக்கும் செயலாய் இருக்கின்றன.

படை அதிகாரிகளின் - அரச அதிகாரிகளின் உத்தரவுகளை மீறி - தம்பாட்டில் மக்கள் மீது கட்டுப்பாடுகள், கெடுபிடிகளை மேற்கொள்வதிலும் பொதுமக்களை மிரட்டி அவர்களைப் பீதியுற வைப்பதிலும் படையினரில் ஒருசாரார் கண்ணும் கருத்துமாகச் செயற்படுவது தெரிகிறது.

வீரமுனைக் கிராம மக்களுக்கு விடுக்கப்பட்ட 'சவபெட்டி' எச்சரிக்கையை உண்மையில் சமாதான முயற்சிகளைக் குழிதோண்டிப் புதைக்கும் நடவடிக்கையாகவே எண்ணவேண்டி உள்ளது.

கிழக்குப் பகுதி நிலைமை குறித்து அரசுத் தரப்பும் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும் தீவிர பரிசீலனை செய்யவேண்டும்.

அங்கு 'தலை இருக்க வால் ஆடும்' நிலையில் படையினர் செயற்படுவதை பிரதமர் ரணில் அனுமதிக்கக்கூடாது.

அரசுத் தலைமை, உத்தரவுகளைப் பிறப்பித்தால மட்டும் போதாது. அந்த உத்தரவுகள் சரிவர நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்பதையும் உன்னிப்பாகக் கவனிக்கவேண்டும். தவறிழைப்பவர்களைக் கண்டுபிடித்து அவர்களுக்குத் தகுந்த தண்டனை வழங்கத் தயங்கக்கூடாது.

தமிழ்மக்களுக்குத் தொல்லை கொடுத்தும் புலிகளைச் சீண்டும் வகையிலும் படையினர் செயற்பட அனுமதித்துவிட்டு அதைப் பார்த்துக்கொண்டு அரசு வாளா இருக்குமானால் அரசின் போக்கில் தமிழ்மக்கள மேலும் நம்பிக்கை இழக்கும் நிலை வரலாம்.

அரசு எங்கே செல்கிறது? அதன் உண்மையான நோக்கம் போரா, சமாதானமா? - என்று குழம்பிய நிலையில் தமிழ்மக்கள் இருக்கிறார்கள். இந்த நிலையில் கிழக்கில் படையினருக்கும் - பொதுமக்களுக்கும் இடையே பகைமை உணர்வைத் தூண்டிவிடத் திரைமறைவில் சதிவேலைகள் இடம்பெறுகின்றனவா என்ற ஐயம் தமிழ்த் தரப்புகளிடையே எழுந்துள்ளது.

வீரமுனையில் பொதுமக்களுக்கு 'சவப்பெட்டி' பயமுறுத்தல் விடுக்கப்பட்டது குறித்துக் கண்காணிப்புக் குழுவினர் விசாரணை நடத்தவேண்டும். சிறு பொறி பெரும் தீயை வளர்த்துவிடலாம். சமாதானத்துக்கு சவப்பெட்டி தயாரிக்கும் முயற்சியில் படையினர் ஈடுபடாதிருப்பதை அரசு உறுதி செய்யட்டும்.

### வடக்கு - கிழக்கில் இதுவரை

# 5 பாடசாலைகளில் இருந்தே படையினர் வெளியேற்றம்

கொழும்பு,மே29

வடக்கு - கிழக்கில் 80 பாடசாலைகளில் படையினர் நிலை கொண்டிருந்தபோதிலும் -

ஐந்து பாடசாலைகளில் இருந்து மட்டுமே வெளியேறியுள்ளனர் என்று இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கு - கிழக்கில் மொத்தம் 80 பாடசாலைகளில் படையினர் நிலைகொண்டிருந்தனர். அவற்றில் ஐந்து பாடசாலைகளில் இருந்து மட்டுமே படையினர் வெளியேறியுள்ளனர்.

வடக்கில் 3 பாடசாலைகளில் இருந்தும் கிழக்கில் இரண்டு பாடசாலைகளில் இருந்தும் படையினர் வெளியேறியுள்ளனர்.

படையினர் வெளியேறிய பாடசாலைகளில் கூட வகுப்புகள் ஆரம்பிக்கமுடியாத நிலையே காணப்படுகின்றது.

பெரும்பாலான பாடசாலைகளில் கூரை இல்லை; தளபாடங்கள் இல்லை; பாடசாலைச் சுற்றாடல்களில் கண்ணி வெடிகள். இந்நிலையில் பாடசாலைகளை ஆரம்பிக்க முடியாதுள்ளது. (க-3)

## சண்டிலிப்பாயில் தனியான கம[நல] சேவை கேந்திர நிலையம்

வலி.தெற்கு,மே29

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச செயலகம் சண்டிலிப்பாயில் தனியானதொரு கமநல சேவை கேந்திர நிலையத்தை அமைக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

கமநல கேந்திர நிலையம் அமைப்பதற்குத் தேவையான பொருத்தமானதொரு காணியினை வலிகாமம் தென் மேற்கு கிராம அபிவிருத்தி சங்கங்களின் சமாசம் ஏற்பாடு செய்துள்ளது. அத்துடன் இக்காணியைக் கொள்வனவு செய்வதற்கென ஒன்றரை லட்சம் ரூபா வரையான பணத்தையும் சமாசத்தினர் திரட்டி உள்ளனர்.

இக்காணிக் கொள்வனவுக்குப் போதுமான பணம் கிடைக்கப் பெறாமையால் வரவு - செலவுத்திட்ட நிதியில் இருந்து பணம் ஒதுக்கீடு செய்து தருமாறு சமாசத்தின் செயலாளர் பொ.சோமசுந்தரம், நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜி.ஜி.கஜேந்திரகுமார், அ.விநாயகமூர்த்தி ஆகியோரிடம் கோரியுள்ளார்.

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசெயலகம் அநேக கமக்காரர்களை உள்ளடக்கியது.

இங்கு தனியானதொரு கமநல சேவை நிலையம் இல்லாமையால் இப்பகுதிக் கமக்காரர்கள் கீரிமலை, உடுவில், தொல்புரம் ஆகிய கிராமங்களில் உள்ள கமநல சேவை நிலையங்களுக்குத் தம் தேவைகளுக்காகச் செல்ல வேண்டியுள்ளது. பல ஆண்டுகளாக இப்பகுதி மக்கள் தமக்குத் தனியானதொரு கமநல சேவைநிலையத்தை அமைத்துத் தருமாறு சம்பந்தப்பட்டவர்களைப் பல தடவைகள் கோரிவருகின்றனர்.

கமக்காரர்களின் கஷ்டத்தை உணர்ந்து வலி. தென்மேற்குக் கிராம அபிவிருத்திச் சமாசம் தமது சங்கங்களின் மூலம் ஒரு தொகைப் பணத்தையும், காணியையும் ஏற்பாடு செய்துள்ளனர். காணியைக் கொள்வனவு செய்வதற்கு நிதி பற்றாக்குறையாக இருப்பதால் எமக்கு நிதியுதவி வழங்க வேண்டுகிறோம். - எனச் சமாசம் தமது கோரிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளது. (க-152)

## 'உறுதி'களும் தெருவுக்கு வந்துவிட்டன! யாழ். வந்தவருக்கு ஏற்பட்ட அனுபவம்

யாழ்ப்பாணம்,மே29

யாழ்.குடாநாட்டில் வீடுகள், கட்டடங்களின் சிதைவுகளும் மற்றும் அங்கிருந்த பொருள்களும் அநாதரவாகக் காணப்பட்டு வந்தகாலம் மலையேறிப்போய் தற்போது காணிகளின் உறுதிகளும் கூட நடுத்தெருவுக்கு வந்துவிட்டன.

அதிர்ச்சி தருகின்ற இவ்வாறான சம்பவம் ஒன்று அண்மையில் யாழ்நகரப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வெளியூரில் இருந்து பிரமுகர் ஒருவர் யாழ்நகரப் பகுதியில் வந்திறங்கினார். கொக்குவில் பகுதியிலுள்ள தனது வீடு, வளவுகளைப் பார்வையிடச்செல்ல முன்னர் உறவினர்களுக்கு கடையொன்றில் சிற்றுண்டிகள் சிலவற்றை வாங்கினார். அங்குதான் அவருக்கு அதிர்ச்சி காத்திருந்தது. வியாபாரி சிற்றுண்டிகளை 'பார்ஸல்' செய்து கொடுத்த பை காணி உறுதியினால் செய்யப்பட்டிருந்தது.

யாழ்.குடாநாட்டின் முக்கிய இடம் ஒன்றுக்காக பிரசித்த நொததாரிஸ் ஒருவரால் அந்தக் கூாணி உறுதி வரையப்பட்டிருந்தது.

வெளிநாடொன்றில் இருந்துவிட்டு, கட்டடங்கள் சிதைவடைந்திருந்தாலும் காணிகளையாவது பார்த்துவிட்டுச் செல்வோமென வந்தவருக்கு அநாதரவான இந்த உறுதியைப் பார்த்ததும் மனதில் வேதனை ஏற்பட்டது. (க-9)

## ஈவினை, அச்செழுப் பகுதிகளில் வலு மிகக் குறைந்த மின்சாரம்!

### பாவனையாளர்கள் அதிருப்தி

கொக்குவில்,மே29

ஈவினை, அச்செழுப் பகுதிகளில் விநியோகிக்கப்பட்டுவரும் மின்சாரம் மிகவும் வலுக்குறைந்து காணப்படுவதாக பாவனையாளர்கள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

இழையில் ஒளிரும் மங்கலான மின் வெளிச்சத்தைக் காணச சகிக்காத பலரும் இரவுப்பொழுதுகளில் மின்குமிழ்களை ஒளிரச செய்வதேயில்லை.

பகல் பொழுதுகளிலும் நினைத்த நேரங்களில் எல்லாம் நீரிறைக்கும் மோட்டார்களைப் பாவிக்கமுடியாது என்றும் இப்பகுதி விவசாயிகள் விசனம் தெரிவித்தனர்.

வலுக்குறைந்த மின்சார விநியோகத்திற்கு மேற்படி பகுதிகளில் அதிகரித்த சட்டவிரோத மின்பாவனையும் ஒரு காரணமென அப்பகுதி வாசிகள் தெரிவித்தனர்.

அலைந்து திரிந்துபெற்ற மின விநியோகத்தைப் பூரணமாகப் பாவிக்கமுடியாது தாம் தினமும அல்லலுறுவதாகவும் அவர்கள வேதனைப்படுகின்றனர். (க-69)

**நாளை**

வைகாசி 16
வியாழக்கிழமை
(30.05.2002)
திதி : சதுர்த்தி
பின்னிரவு 3.39 வரை.
நட்சத்திரம் : உத்தராடம்
பின்னிரவு 4.57 வரை
கரிநாள்
சங்கடஹர சதுர்த்தி விரதம்
சுபநேரம் : 7.22 - 8.52
ராகுகாலம்: 1.22 - 2.52
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

நன்மையான வாழ்க்கையும் இன்பமான மரணமும் உண்மையான அருளாகும்.

## குடாநாட்டில் மீண்டும் சிங்களவரின் பேக்கரி

### கைவிட்டுச் சென்றவற்றை ஆரம்பிக்க முயற்சி

யாழ்.குடாநாட்டில் கடந்த பல வருடங்களுக்கு முன்பு பெரும்பான்மை இன மக்களால் நடத்தப்பட்டுவந்த பேக்கரிகளை மீண்டும் நடத்துவதற்கு உரியவர்கள் ஆர்வம்காட்டி வருகின்றனர்.

தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதானச் சூழலை அடுத்துப் பெருமளவிலான தென்பகுதி மக்கள் இங்கு வருகின்றனர். அவர்களில் முன்பு இங்கு பேக்கரிகளை நடத்தியவர்கள் மீண்டும் அவற்றை ஆரம்பிப்பதில் ஆர்வம் காட்டுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் தாம் முன்பு நடத்தி வந்த பேக்கரிகளுக்குச் சென்று அவற்றைப் பார்வையிட்டு வருவதுடன் தமது மேற்பார்வையின் கீழ் அவற்றை மீண்டும் நடத்துவதற்கும் உத்தேசித்து வருகின்றனர்.

சுவையான பாண் மற்றும் பிஸ்கற் வகைகளைத் தயாரித்து விற் பனை செய்ததன் மூலம் பெரும்பான்மை இன மக்களின் பல பேக்கரிகள் கடந்த காலங்களில் இங்கு பிரபல்யமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-10)

## மிருசுவிலில் மகப்பேற்று மனையை ஆரம்பிக்கவும் நடவடிக்கை

கடந்த இரண்டு வருடங்களாக படையினரின் சிகிச்சை நிலையமாக இயங்கி வந்த மிருசுவில் ஆஸ்பத்திரியை சுகாதாரப் பகுதியினர் பொறுப்பேற்றுள்ளனர். தற்போது அங்கு வைத்திய சிகிச்சைகள் ஆரம்பமாகியுள்ளன.

அதைத் தொடர்ந்து கொடிகாமத்தில் இயங்கிவந்த மத்திய மருந்தகம் மூடப்பட்டுள்ளது.

மக்களின் இடம்பெயர்வின் பின்னர் படையினரால் நடத்தப்பட்டு வந்த இவ்வைத்தியசாலை கடந்த முதலாம் திகதி சுகாதாரத் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

விரைவில் இங்குள்ள மகப்பேற்று மனையை ஆரம்பிக்க சுகாதாரத் திணைக்களத்தினர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர் (க-117)

## கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு சத்திர சிகிச்சை உபகரணங்கள் 2வருடங்களாக அனுப்பப்படவில்லை

யாழ்ப்பாணம்,மே29

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு கடந்த 2000ஆம் ஆண்டுக்குப் பின்பு சத்திரசிகிச்சை உபகரணங்கள் எதுவும் வழங்கப்படவில்லை.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரியினால் கிளிநொச்சி பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்கடித்தத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தொடர்ந்தும் எமது வைத்தியசாலையில் மருந்துகளுக்கும் மற்றும் வைத்திய உபகரணங்களுக்கும் பற்றாக்குறை காணப்படுகிறது. முன்பும் இதுபோன்ற பல விடயங்கள் தொடர்பாகக் கடிதங்களை அனுப்பி வைத்தபோதும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

தற்பொழுது நாட்டில் சுமுகமானதொரு சூழ்நிலை நிலவுகின்றபோதும் இவற்றுக்கான பற்றாக்குறை இன்னமும் நீங்கவில்லை. ஆகவே மருந்துப் பொருள்களையும் வைத்திய உபகரணங்களையும் பெறுவதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன் - என்றுள்ளது.

இக்கடிதத்தின் பிரதிகள் கிளிநொச்சி, வவுனியா அரச அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (க-10)



நல்லூர் சயன்ஸ் அக்கடமியின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

நிறுவனத்தின் இயக்குநர் சரா.புவனேஸ்வரன் தலைமையுரை நிகழ்த்துவதையும், பிரதமவிருந்தினரான யாழ்.பல்கலைக்கழக ஆங்கிலத்துறைத் தலைவர் திருமதி சாந்தி விக்னராஜா ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற்ற மாணவி கே.மஞ்சுளாவுக்கு பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். நிறுவன ஆசிரியர் வி.ஜோசப்பும் படத்தில் காணப்படுகின்றார். (எ)

# 32நாடுகள் மோதும் 17ஆவது உலகக் கிண்ணம்

உலகில் ஒலிம்பிக் விளையாட்டுகளுக்கு அடுத்ததாக பிரபலமான போட்டி உலகக்கிண்ணத்திற்கான கால்ப்பந்தாட்டப் போட்டிகளாகும். உலகிலுள்ள ஏறக்குறைய அனைத்து நாடுகளிலும் கால்பந்தாட்டம் விளையாடப்படுகிறது.

உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகள் நடைபெறுவதற்கு முன்னர் தகுதிகாண் போட்டிகள் நடைபெறும். இவ்வாண்டு உலகக் கிண்ணப்போட்டிகளுக்கான தகுதிகாண் போட்டிகள் 2000ஆம்ஆண்டு மார்ச் மாதம் 4ஆம் திகதியில் இருந்து 2001ஆம் ஆண்டு நவம்பர் 25ஆம் திகதிவரை நடைபெற்றன.

இந்த தகுதிகாண் போட்டிகள் ஆசியா, தென்அமெக்கா, வடஅமெரிக்கா, ஆபிரிக்கா மற்றும் ஐரோப்பா ஆகிய 5 வலயங்களாக பிரிக்கப்பட்டு நடத்தப்பட்டன. தகுதிகாண் போட்டிகள் மூலம் 32 நாடுகள் உலகக் கிண்ணப்போட்டியில் பங்குபற்றும் தகுதியைப் பெற்றுள்ளன. தகுதிகாண் போட்டிகளில் இம்முறை 198 நாடுகள் பங்குபற்றியுள்ளன. இம்முறை உலகக் கிண்ணப்போட்டிகள் ஜப்பான் மற்றும் தென்கொரியா ஆகிய நாடுகளில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமையில் இருந்து நடைபெறவுள்ளன.

இனி ஒவ்வொரு வலயத்திலிருந்தும் உலகக் கிண்ணப் போட்டிகளுக்குத் தகுதி பெற்ற நாடுகளைப் பார்ப்போம்.

## ஆசிய வலயம்

ஆசிய வலயத்திற்கான தகுதிகாண் போட்டிகளில் 40 நாடுகள் பங்குபற்றின. இவற்றுள் உலகக் கிண்ணப்போட்டிகளில் பங்குபற்றும் தகுதியை இரண்டு நாடுகளே பெற்றுள்ளன.

இந்த 40 நாடுகளும் ஆரம்பச்சுற்றில் 10 குழுக்களாகப் பிரிக்கப்பட்டன. முதல் சுற்றுப் போட்டிகளில் ஒவ்வொரு குழுவிலும் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்ற அணிகள் (20அணிகள்) இரண்டாம் சுற்றுக்குத் தகுதி பெற்றன.

இந்த 20 நாடுகளும் இரண்டாம் சுற்றில் 2 பிரிவாகப் பிரிக்கப்பட்டு போட்டிகள் நடைபெற்றன. இந்த இரு பிரிவுகளிலும் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்ற 4நாடுகள் ஒன்றுடன் ஒன்று மோதின.இந்தச் சுற்றில் முதலாம், இரண்டாம் இடங்களைப்பெற்ற அணிகள் உலகக் கிண்ணப் போட்டிகளில் பங்குபற்றத் தகதிபெற்றன.

இந்தச் சுற்றில் 3ஆம், 4ஆம் இடங்களைப் பெற்ற அணிகளுக்கிடையே போட்டி நடைபெற்று, அதில் வெற்றிபெறும் அணி ஐரோப்பிய அணி ஒன்றுடன் போட்டியிடவேண்டியிருந்தது. 3ஆவது இடத்தைப் பெற்ற ஈரான் அணி ஐரோப்பிய வலயத்தைச் சேர்ந்த அயர்லாந்து அணியுடன் மோதித் .தோல்வியைத் தழுவியதால் உலகக் கிண்ணப் போட்டிகளில் பங்குபற்றும் தகுதியை இழந்தது.

இறுதியில் சீனா மற்றும் சவூதி அரேபியா ஆகிய நாடுகள் உலகக் கிண்ணப் போட்டிகளில் பங்குபற்றும் தகுதியைப் பெற்றன.

இவற்றைவிட ஜப்பான் மற்றும் தென்கொரியா ஆகிய ஆசிய நாடுகளும் உலகக் கிண்ணப் போட்டிகளில் பங்குபற்றவுள்ளன. இந்தப் போட்டிகளை நடத்தும் நாடுகள் என்ற வகையிலேயே இந்த நாடுகள் தகுதி பெற்றுள்ளன.

### 1. சீன அணி

உலகில் அதிக சனத்தொகையைக் கொண்ட நாடாக சீனா விளங்கியபோதிலும் அது இம்முறையே உலகக் கிண்ணப் போட்டிகளில் பங்குபற்றும் தகுதியைப் பெற்றுள்ளது.

*பயிற்சியாளர்:* போறா மிலியுட்நொவிச் (யுகோஸ்லாவியா)

*சிறந்த வீரர்கள்:*

1. ஷங்க் ஷி (இங்கிலாந்தில் கிறிஸ்டல் அணிக்கு விளையாடுபவர்)
2. மா மின்க் யு (இத்தாலியில் பெருஜியா அணிக்கு விளையாடுபவர்)

### 2. ஜப்பான் அணி

போட்டிகளை நடத்தும் நாடு என்ற வகையில் இம்முறை தகுதி பெற்றுள்ளது. உலகக் கிண்ணப் போட்டியில் ஜப்பான் இரண்டாவது முறையாகப் பங்குபற்றுகிறது. முதன்முறையாக 1998இல் பங்குபற்றியது.

*பயிற்சியாளர்:* பிலிபே ட்றுஷியர் (பிரான்ஸ்)

*சிறந்த வீரர்கள்:*

1. ஹிடெடோஷி நகாடா (இத்தாலியில் பர்மா அணிக்காக விளையாடுபவர்)
2. யொஷிகஸ்ஷ கவகுச்சி (அணித் தலைவரும் கோல் காப்பாளரும், இங்கிலாந்தில் போட்ஸ் மவுன்ட் அணிக்கு விளையாடுபவர்.

### 3 சவூதி அரேபியா

1994, 1998 உலகக் கிண்ணப் போட்டிகளிலும் பங்குபற்றியது. 1966 இல் ஆசிய நாடான வடகொரியாவுக்குப் பின்னர் உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு அடுத்தடுத்து 3 தடவைகள் தகுதிபெற்ற(1994, 1998, 2002) இரண்டாது ஆசிய நாடாகும்.




*பயிற்சியாளர்:* நசர் அல் ஜொஹார்

*சிறந்த வீரர்கள்:*

1. சமிர் அல் ஜபார்(அணித் தலைவர், இங்கிலாந்தில் பெல்வஸ் அணிக்கு விளையாடுகிறார்)
2. அப்துல்லா சிஹாத(பிரபல முன்னணி வீரர்)
3. நவப் அல் தெம்யாட்(2001 ஆம் ஆண்டின் ஆசிய சிறந்த வீரர்)

### 4. தென்கொரியா

உலகக் கிண்ணப் போட்டிகளில் பங்குபற்றத் தகுதி பெற்றுள்ளது. இது 5ஆவது தடவையாகும்.

*பயிற்சியாளர்:* க்குஷ் ஹிட்ன்க் (நெதர்லாந்து)

*சிறந்த வீரர்கள்:*

1. லீ-டொங்-யுங் (பிரபல முன்னணி வீரர் சிங்கராஜா என அழைக்கப்படுவார்)
2. ஜே-வோன்-சிம் (பின்னணித் தடுப்பு வீரர், அயின்டக்ட் பிறாங்போட் என்னும் ஜேர்மனி அணிக்கு விளையாடுகிறார்)


முதன் முதலாக உலகக் கிண்ணத்தை வென்ற உருகுவே அணி

## வடஅமெரிக்க வலயம்

தகுதிபெற்றுள்ள நாடுகள்: கொஸ்டறிக்கா, மெக்சிக்கோ, அமெரிக்க வடக்கு மற்றும் மத்திய அமெரிக்காவில் இருந்து 6 நாடுகள் தகுதிகாண் போட்டிகளில் பங்குபற்றின.

### 5. கொஸ்டறிக்கா

12 வருடங்களின் பின்னர் உலகக் கிண்ணப் போட்டிகளில் பங்குபற்றுகிறது.

*பயிற்சியாளர்:* அலெக்சான்டிறோ குஷமாறாயெஸ்

2002
FIFA WORLD CUP
KOREA JAPAN

*சிறந்த வீரர்கள்:*

1. பொலோ வன் வோப்(பிரபல முன்னணி வீரர் இங்கிலாந்தில் மன்செஸ்டர் சிட்டி அணிக்கு விளையாடுபவர்)
2. ஜார்விஸ் பிறமன்ட்(பின்னணி பாதுகாப்பு வீரர்)
3. றொனால்ட் பொன்சேகா (68 போட்டிகளில் 34 கோல்களை அடித்த வீரர்)

### 6. மெக்சிக்கோ

12ஆவது தடவையாக தகுதி பெற்றுள்ளது. 1986இல் தனது நாட்டில் நடைபெற்ற போட்டிகளில் கால் இறுதிப் போட்டிகளுக்குத் தகுதிபெற்றது.

*பயிற்சியாளர்:* ஜாவியர் அக்வயர்

*சிறந்த வீரர்:*

1. குவாஹ்மொட் ப்ளங்கோ
2. அல்பேர்ட்டோ கார்ஷியா அஷ்பே.

### 7. அமெரிக்கா

7ஆவது தடவையாக (1930, 34, 50, 90, 94, 98) தகுதி பெற்றுள்ளது. 1930இல் அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

*பயிற்சியாளர்:* புறூஸ் அரினா.

*சிறந்த வீரர்கள்:*

1. ஜோ மாக்ஸ் மூவர்(இங்கிலாந்தில் எவர்ட்டன் அணிக்கு விளையாடுபவர்)
2. க்லோடியோ ரெயினா - அணித் தலைவர்.

## ஆபிரிக்க வலயம்

இவ்வலயத்தில் இருந்து 5 நாடுகள் உலகக் கிண்ணப் போட்டிகளில் கலந்துகொள்ளத் தகுதி பெற்றுள்ளன.

### 8. தென் ஆபிரிக்கா

இரண்டாவது (1998) தடவையாகத் தகுதி பெற்றுள்ளது.

*பயிற்சியாளர்:* கார்லோஸ் குயிரோஷ்(போத்துக்கல்)

*சிறந்த வீரர்கள்:*

1. லூக்கஸ் றெடோபே (முன்னாள் அணித் தலைவர்)
2. பியறே இஷா(பின்னணித் தடுப்பு வீரர்)

### 9. கெமறூன்

5ஆவது தடவையாக உலகக் கிண்ணப் போட்டிகளில் கலந்துகொள்ளுகிறது.(1982, 90, 94, 98) 1990இல் அரை இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

*பயிற்சியாளர்:* வின்பிறட் ஷாபர் (ஜேர்மனி)

*சிறந்த வீரர்கள்:*

1.பற்றிக் மிபோவா(2000 ஒலிம்பிக் போட்டியில் தங்கப் பதக்கம் பெற்ற அணியில் இடம்பெற்றவர்)
2. றிகோபேர்ட் சோன்(பின்னணிப் புாதுகாப்பு வீரர்)

### நைஜீரியா

3ஆவது முறையாக(1994, 98) தகுதி பெற்றுள்ளது. கடந்த இரு தடவைகளிலும் கால் இறுதிப் போட்டிகளுக்குத் தகுதிபெற்றது.

*பயிற்சியாளர்:* ஷைபு அமொட்யு.

*சிறந்த வீரர்கள்:*

1. சன்டே ஒலிஷா(1996 ஒலிம்பிக் தங்கப் பதக்கம் பெற்ற அணியில் இடம்பெற்றவர்)
2. ன்வன்கோ கானு (1996 - 1999 ஆபிரிக்க சிறந்த கால்பந்தாட்ட வீரர்)

### 11. செனகல்

முதன் முறையாகத் தகுதிபெற்றுள்ளது.

*பயிற்சியாளர்:* புறுனோ வெட்சு (பிரான்ஸ்)

*சிறந்த வீரர்கள்:*

1.பர்டினன்ட் கொலி (பின்னணி பாதுகாப்பு வீரர்)

(2) எல் - ஹுட்ஜி டியொப் முன்னணி வீரர்

### 12 ரியூனிஷியா

மூன்றாவது முறையாக (1978, 1998) தகுதிபெற்றுள்ளது.

*பயிற்சியாளர்:* ஹென்றி மைக்கல் (பிரான்ஸ்)

*சிறந்த வீரர்கள்:*

(1) அடெல் செலிம் (இதுவரை உலகப் போட்டிகளின் 70 கோல்களை அடித்தவர்.

(2) சபெயிர் பெயா

## தென் அமெரிக்க வலயம்

ஆரம்பச் சுற்றுக்களில் 10 நாடுகள் பங்கேற்றன. ஆரம்பச் சுற்றின் முடிவில் ஆர்ஜென்ரீனா, ஈக்குவடோர், பரகுவே மற்றும் பிறேஸில் ஆகியன உலகக் கிண்ணப் போட்டிகளில் பங்குபற்றும் வாய்ப்பைப் பெற்றன. இதில் 5ஆவது இடத்தைப் பெற்ற உருகுவே அணி ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரு போட்டிகளிலும் வெற்றி பெற்றால் உலகக் கிண்ணப் போட்டிகளில் பங்குபற்றும் தகுதியைப் பெறுவதாக இருந்தது. அந்தப் போட்டிகள் இரண்டிலும் வெற்றிபெற்றதன் மூலம் தென் அமெரிக்க வலயத்திலிருந்து 5ஆவது அணியாக உலக கிண்ணப் போட்டிகளில் பெறும் தகுதியை உருகுவே அணி பெற்றது.

### 13. ஆர்ஜென்ரீனா

இரு முறை உலகக் கிண்ணப் போட்டிகளில் வெற்றிபெற்ற ஆஜென்ரீனா அணி இம்முறை தகுதிகாண் போட்டிகளில் இலகுவாகத் தகுதி பெற்றது.

*பயிற்சியாளர்;* மார்செலோ பியெசா

*சிறந்த வீரர்கள்:*

(1) கபிரியெல் பட்டிஸ்ரா (75 போட்டிகளில் 55 கோல்களை இதுவரை அடித்துள்ளார்)

(2) ஹர்னன் கிறெஸ்போ(சிறந்த முன்னணி வீரர்)

### 14. பிறேஸில்

நான்கு தடவைகள் (1958, 1962, 1970, 1994) உலகக் கிண்ணத்தை தட்டிச் சென்ற பிறேஸில் அணிக்கு தகுதி பெறுவதே அரும்பாடாகவிருந்தது. இருப்பினும் உலகக் கிண்ண வரலாற்றில் இதுவரை அனைத்துப் போட்டிகளிலும் கலந்துகொண்ட பெருமை பிறேஸிலுக்கே சேரும்.

*பயிற்சியாளர்:* லூவிஸ் பிலிபே ஸ்கொலாரி

*சிறந்த வீரர்கள்:*

(1) றிவல்டோ

(2) றொபர்டோ கார்லோஸ்

### 15. ஈக்குவடோர்

முதன் முதலாகத் தகுதி பெற்றுள்ளது.

*பயிற்சியாளர்:* ஹர்னன் டாரியோ

*சிறந்த வீரர்கள்:*

(1) அலெக்ஸ் அகுவன்ய.

(2) ஒகஸ்டின் டெல் காடோ.

### 16. பரகுவே

ஆறாவது முறையாக உலகக் கிண்ணப் போட்டிகளில் பங்குபற்றும் தகுதியைப் பெற்றுள்ளது. 1930, 1950, 1958, 1986, 1998 ஆகிய ஆண்டுகளில் தகுதிபெற்றது.

*பயிற்சியாளர்:* சர்ஜியோ மாக்காரியன்.

*சிறந்த வீரர்கள்:*

(1) ஜோசே லூவிஸ் ஷிலவெர்ட் - (அணித் தலைவரும் கோல் காப்பாளரும்).

2. ரோச்சன்டா குறூஸ் (20 வயதே நிரம்பியவர்).

### 17. உருகுவே

1930, 1950, 1954, 1962, 1966, 1970, 1974, 1986, 1990 என இத்துடன 10ஆவது தடவையாகத் தகுதி பெற்றுள்ளது.

*பயிற்சியாளர்:* விக்டர் ப்ரவா

*சிறந்த வீரர்கள்:*

(1) அல்வாரோ றிக்கோபா.

(2) டாரியோ சில்வா.

## ஐரோப்பிய வலயம்

உலகக் கிண்ண இறுதிப் போட்டிகளில் மிக அதிகமாக ஐரோப்பிய வலயத்திலிருந்தே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இறுதிப் போட்டியில் பங்குபற்றும 15 அணிகளில் 14 அணிகள் ஆரம்பச் சுற்றுகள் மூலமும் 15 ஆவது அணியாக தற்போதைய உலகச் சம்பியனான பிரான்ஸ"ம் தகுதி பெற்றுள்ளன.

தகுதிபெற்ற இந்த அணிகளுள் அயர்லாந்து அணி ஆசிய வலயத்தைச் சேர்ந்த ஈரான் அணியுடன் மோத நேர்ந்தது. அதில் வெற்றி பெற்றே அயர்லாந்து இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

### 18. பெல்ஜியம்

1930, 1934, 1938, 1954, 1970, 1982, 1986, 1990, 1994, 1998 என இம்முறையுடன் 11 தடவைகள் இறுதிப் போட்டிகளில் பங்குபற்றும் வாய்ப்பைப் பெற்றுள்ளது. 1986இல் 4ஆவது இடத்தைப் பெற்றது.

*பயிற்சியாளர்:* றோபேர்ட் வாசிஜ்

*சிறந்த வீரர்கள்:*

(1) மார்க் வில் மயிட்ஸ்.

(2) எமில் மிபென்யா.

### 19. குறோஷியா

1998இல் இறுதிப் போட்டிகளில் 3ஆவது இடத்தைப் பெற்றது.

*பயிற்சியாளர்:* மிக்கோ ஜோசிச்.

*சிறந்த வீரர்கள்:*

(1) றொபேட் யார்னி.

(2) பொஸ்கோ காலகன்.

### 20. டென்மார்க்

1986, 1998இல் இறுதிப் போட்டிகளுக்குத் தகுதி பெற்றது. 1986 இல் அரை இறுதி ஆட்டத்தில் பங்குபற்றத் தகுதி பெற்றது.

*பயிற்சியாளர்:* மோர்டன் ஒல்சன்

*சிறந்த வீரர்கள்:*

(1) எபி.சான்ட்.

(2) யான் ஹெயின்ட்சே.

### 21. இங்கிலாந்து

11ஆவது தடவையாக இறுதிப் போட்டிகளில் பங்குபற்றும் தகுதியைப் பெற்றுள்ளது. (1950, 1954, 1958, 1962, 1966, 1970, 1982, 1986, 1990, 1998). 196 இல் இங்கிலாந்தில் நடைபெற்ற உலக கிண்ணப் போட்டிகளில் கிண்ணத்தை வென்றெடுத்தது.

*பயிற்சியாளர்:* ஸ்வன் கோரான் எரிக்சன் (சுவீடன்).

*சிறந்த வீரர்கள்:*

(1) டேவிட் பேகம (அணித் தலைவர்),

(2) மைக்கல் ஓவன்.

### 22. பிரான்ஸ்

தற்போதைய ஐரோப்பிய மற்றும் உலக சம்பியன் பிரான்ஸே. 1930, 1934, 1938, 1954, 1958, 1966, 1978, 1982, 1986, 1998 என இம்முறை

(07ஆம் பக்கம் பார்க்க)

# 25ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

மலர்வு 18 - 05 - 1920



உதிர்வு 04 - 06 - 1977

## அமரர் முருகேசு கனகசபை

*(இளைப்பாறிய புகையிரத உத்தியோகத்தர் மலேசியா)*

**திதி: 29.05.2002**

இருபத்தைந்து ஆண்டுகளானாலும்
நாம் மன ஆறுதல் அடையவில்லை

*மனைவி:* விமலா *(ஜேர்மனி)*
*மக்கள்:* சந்திரா, மல்லிகா *(ஜேர்மனி)*, சாந்தி,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*"கணேசர் மாளிகை",*
*தொட்டிலடி,*
*சங்கானை.* (4215)

# ஈரவிழிகளுடன் இரண்டாம் ஆண்டு

மலர்வு 28 - 10 - 1946



உதிர்வு 29 - 05 - 2000

## அமரர்
## மார்க்கண்டு பரமேஸ்வரன்

*(ஸ்ரீ வராகி அம்பாள் ஆலய முகாமையாளர்,*
*முன்னாள் கப்பல் பொறியியலாளர்)*

ஆண்டுகளிரண்டு சென்றாலும் நினைவுகள் ஆறவில்லை!
அரைநொடியில் பிரிந்ததுயர் என்றுமே மாறவில்லை!
ஆலயமே உயிர் என்று அதற்காகப் பாடுபட்டீர்கள்!
அம்பாளின் திருவடிகளில் அமரராகி விட்டீர்கள்!
ஆறுதல் சொல்ல இனி யாருமில்லை!
ஆலமரம் சாய்ந்ததனால் ஆற இனி இடமுமில்லை!
என்ன சந்தோசம் எமக்கு வந்தாலும்
நீங்கள் இல்லையே என கதறுகிறோம்!
இலட்சியங்கள் நிறைவேற உங்கள் ஆசி வேண்டுகிறோம்!

\- குடும்பத்தினர்.

*வெண்மதி,*
*ஆனைக்கோட்டை.*

*நாவலர் ஒழுங்கை,*
*ஆனைப்பந்தி.*

(4235)

# ஓராண்டு நிறைவினில்
## ஓயாத துயரினில்

மண்ணுலக இணைப்பு 21 - 06 - 1917



விண்ணுலக அணைப்பு 08 - 06 - 2001

## அமரர் கார்த்திகேசு தம்பு செல்லத்துரை

*(சடாசிவம், போமன்)*

*(இளைப்பாறிய உதவிப் பணிப்பாளர், அரசாங்க சிறுகைத்தொழில் கூட்டுத்தாபனம், கொழும்பு)*

*திதி: 29.05.2002*

எம் அன்புத் தெய்வமே! ஐயா!!
ஓராண்டு கழிந்தால் என்ன?
ஒரு யுகம்தான் சென்றால் என்ன?
நீர் எமக்கு அணையாத தீபமன்றோ!
மீளாத் துயில் கொண்டு எம்மை ஆறாத்துயரில்
ஆழ்த்திவிட்டுச் சென்ற அன்புத் தெய்வமே!
பண்பின் உறைவிடமாய் பாசத்தின் பிறப்பிடமாய்
அன்புடனே எமை அரவணைத்து அணையாது
ஒளிவிட்ட தீபமன்றோ! ஐயா!!
உங்கள் பாசமிகு நினைவுகள் நினைத்து
தினந்தினம் துடியாய்த் துடித்துக் கலங்குகின்றோம் ஐயா!

*என்றும் நீங்கா நினைவுகளுடன்:*
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*மீனாட்சி அம்மன் கோயில் வீதி,*
*சங்கத்தானை,*
*சாவகச்சேரி.* (4092)

# 32 நாடுகள் மோதும்...

(6ஆம் பக்கத் தொடர்சி)

யுடன் 11ஆவது தடவையாகத் தகுதி பெற்றுள்ளது.

*பயிற்சியாளர்:* றொஜர் லெமியர்

*சிறந்த வீரர்கள்:*

(1) சினெடின் சிடன் (உலகின் சிறந்த வீரர் எனக் கருதப்படுகிறார். மேலும் ஆகக் கூடிய நிதிக்கு [65 அமெரிக்க மில்லியன்] விளையாட்டுக் கழகத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளார்).

**23. அயர்லாந்து**

1990, 1994 மற்றும் இவ்வாண்டு என 3 தடவைகள் தகுதி பெற்றுள்ளது. 1990இல் இத்தாலியில் அரை இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

*சிறந்த வீரர்:* றொயி கின்.

**24. ரஷ்யா**

தனி நாடாகத் தகுதி பெறுவது 2ஆவது தடவையாகும். சோவியத் யூனியன் என்ற பெயரில் 1958, 1962, 1966, 1970, 1982, 1986, 1990 ஆண்டுகளிலும் 1994 ரஷ்யா என்ற பெயரிலும் தகுதி பெற்றது.

*சிறந்த வீரர்கள்:*

(1) அலெக்சான்திரோ மொன்டொவொயி.

(2) விக்தோர் ஒனெப்கோ.

**25. ஸ்பானியா**

1934, 1950, 1962, 1966, 1978, 1982, 1986, 1990, 1994, 1998 மற்றும் இவ்வாண்டு என 11 தடவைகள் தகுதி பெற்றுள்ளது. 1950 இல் பிரேஸிலில் நடைபெற்ற போட்டிகளில் அரை இறுதிப் போட்டியில் தகுதி பெற்றது.

*பயிற்சியாளர்:* ஜோசே அன்ரொனியோ கமச்சோ

*சிறந்த வீரர்கள்:*

(1) ராவுல் (24 வயது).

(2) பெர்ணாணடோ ஹியெரோ.

**26. சுவீடன்**

1934, 1938, 1950, 1958, 1970, 1974, 1978, 1990, 1994 மற்றும் இவ்வாண்டு என 10 தடவைகள் தகுதி பெற்றுள்ளது. 1958இல் சுவீடனில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் பிரேஸில் அணியிடம் தோல்வி கண்டு 2ஆம் இடத்தைப் பெற்றது.

*பயிற்சியாளர்:* ப்றெட்றிக் லியூன்பேர்க் மற்றும் ரொமி சொடறம்.

*சிறந்த வீரர்:*

(1) ஹென்றிக் லாசன்.

**27. ஸ்லோவேனியா**

முதல் முறையாகத் தகுதி பெற்றுள்ளது. யூகோஸ்லாவிய சமஷ்டிக் குடியரசில் இருந்து பிரிந்த நாடாகும்.

*பயிற்சியாளர்:* சிறேவிகோ கடனெச்.

*சிறந்த வீரர்:*

(1) ஸ்லட்கோ சகோவிச்.

**28. துருக்கி**

48 வருடங்களின் பின்னர் (1954) தகுதி பெற்றுள்ளது. தகுதிகாண் போட்டிகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளது.

பயிற்சியாளர்: செஹோல் ஹூான்ஸ்

சிறந்த வீரர்:

(1) ஹகான் சூகூர்.

**19. ஜேர்மனி**

ஆரம்பத்தில் தகுதிபெறும் வாய்ப்பு இல்லைப்போல் தோன்றியது. இருப்பினும் திறமையை ஒன்றுசேர்த்து 15ஆவது தடவையாக தகுதிபெற்றுள்ளது. 1954, 1958, 1962, 1966, 1970, 1974, 1978, 1982, 1986, 1990 (மேற்கு ஜேர்மனி அணியாக). 1954, 1974, 1990 ஆகிய போட்டிகளில் உலகக் கிண்ணத்தைத் தட்டிச் சென்றது.

*பயிற்சியாளர்:* ருடி வொலர்

*சிறந்த வீரர்கள்:*

(1) ஒலிவர் கான் (அணித் தலைவரும் கோல் காப்பாளரும்),

(2) மைக்கல் ப்ளாக்.

**30. இத்தாலி**

1934, 1938, 1950, 1954, 1962, 1966, 1970, 1974, 1978, 1982, 1986, 1990, 1994, 1998 என 15 தடவைகள் தகுதிபெற்றுள்ளது. 1934, 1938, 1982 ஆகிய போட்டிகளில் உலகக் கிண்ணத்தை வென்றது.

*பயிற்சியாளர்:* ஜியோவானி ட்ராபாதோனி.

*சிறந்த வீரர்:*

(1) பாவிலோ மல்டினி (117 சர்வதேசப் போட்டிகளில் விளையாடியுள்ளார்).

**31. போலந்து**

16 வருடங்களின் பின்னர் தகுதி பெற்றுள்ளது. 1938, 1974, 1978, 1982, 1986 ஆகிய போட்டிகளில் தகுதி பெற்றது. 1974 மற்றும் 1982 போட்டிகளில் 3ஆம் இடத்தைப் பெற்றது.

பயிற்சியாளர்: ஜேர்ஷி ருடெகீ (கோல் காப்பாளா).

**32. போர்த்துக்கல்**

16 வருடங்களுக்குப் பின்னர் தகுதி பெற்றுள்ளது. இதற்கு முன்னர் 2 தடவைகள் (1966, 1986) தகுதி பெற்றது. 1966இல் 3ஆவது இடத்தைப் பெற்றது.

*பயிற்சியாளர்:* அந்தோனியோ ஒலிவீரா.

*சிறந்த வீரர்கள்:*

(1) லூவிஸ் ப்பிகோ.

(2) ருயி கொஸ்தா. ★

# மூன்றாவது பிறந்தநாள் வாழ்த்து

**29.05.2002**

HAPPY



BIRTHDAY

## செல்வி வே.விசாலி

லண்டனில் வசிக்கும் **திரு.திருமதி வேணுகோபன் - மைதிலி** தம்பதிகளின் செல்வப் **புதல்வி விசாலி** தனது மூன்றாவது பிறந்தநாளை மீசாலை மேற்கு பிருந்தாவனத்தில் கங்காணி முருகன் திருவருள் நிற்க இன்று (29.05.2002) புதன்கிழமை வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

விசாலியை தங்கை வைஷ்னவி, அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, கனடாவில் வசிக்கும் அம்மப்பா, அம்மம்மா, லண்டனில் வசிக்கும் மாமா, மாமிமார், கனடாவில் வசிக்கும் மாமா, மாமிமார், ஹொலண்ட் மாமா, மாமிமார், மைத்துனிமார், மைத்துனன்மார் ஆகியோர் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

*"பிருந்தாவனம்"*
*மீசாலை மேற்கு.* (4239)

*தகவல்:*
**வயன் சி.சற்குணநாதன்** (அப்பப்பா).

# 3ஆம் ஆண்டு நினைவலைகள்

*பிறப்பு* 10 - 01 - 1918



*இறப்பு* 02 - 06 - 1999

## அமரர் ஏரம்பு சின்னத்துரை

**திதி: 29.05.2002**

*மூன்று ஆண்டுகள் ஆனாலும் ஆறாது உங்கள் துயர்!*

*உங்கள் பிரிவால் துயருறும்:*
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்,
சகோதரன், சகோதரி,
மச்சான், மச்சாள்மார்.

*"துரைமலர் பொய்கை",*
*இணுவில் மேற்கு,*
*இணுவில்.*
தொலைபேசி: உள்நாடு 021-3715
வெளிநாடு: 0094213715. (4044)

உ

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சித்திரபானு வருடம் வைகாசித் திங்கள் 15ஆம் நாள் இன்று (29.05.2002) புதன்கிழமை காலை 9.48 மணிமுதல் 11.24 மணிவரையுள்ள கர்க்கடக லக்கின சுபமுகூர்த்த நல்வேளையில்,

எமது புத்திரன் திருநிறைசெல்வன்
**சிவகணேசன்**
*(இந்து கலாசார திணைக்களம், கொழும்பு – 4)*
**அவர்களுக்கும்**

எமது புத்திரி திருநிறைசெல்வி
**மலர்விழி**
*(ஆசிரியை)*
**அவர்களுக்கும்**

திருவருள் துணைகொண்டு தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலய திருக்கல்யாண மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*வரவேற்புபசாரம்:* மணமகன் இல்லம்- 30.05.2002 மாலை 3.30 மணிமுதல், மணமகள் இல்லம்- 31.05.2002 மாலை 3.30 மணி.

தங்கள் நல்வரவை நாடும்:

**திரு.திருமதி சோதிநாதன்**
(Retived M.L.T., Jaffna Hospital)
**"சாந்தி பவனம்"**
**சித்தன்கேணி.**

*(இரு வீட்டார் அழைப்பு)*

**திரு.திருமதி ந.தவகுலசிங்கம்**
ஏழாலை வடக்கு.
தற்காலிக முகவரி: சிவன் வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

(4173)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## பிறிமா கோழிக்குஞ்சுகள்

பிறிமா கைலைன் வெள்ளை பேட்டுக் குஞ்சுகளும், புறொயிலர் குஞ்சுகளும் எம்மிடம் பதிவுசெய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்புகள்: மாருதி ரெக்ஸ், இல.1, பஜார் வீதி, யாழ்ப்பாணம்; சிற்றி காமென்ஸ், 535A, பலாலி வீதி, யாழ்ப்பாணம். (4171)

பிறிமா ஹைலைன் பிறவுண் வெள்ளை பேட்டுக்குஞ்சுகள் ரூபா40/-, புறொயிலர் குஞ்சுகள் ரூபா 30/- விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 'மல்லிகாபதி' மானிப்பாய். (C/22292)

## வாடகைக்குத் தேவை

K.K.S. வீதி, ஸ்ரான்லி வீதி, மணிக்கூட்டு வீதி, மின்சார நிலைய வீதி ஆகிய பகுதிகளில் கடை ஒன்று வாடகைக்குத் தேவை. தர விரும்புபவர்கள் தொடர்புகொள்ளவேண்டிய முகவரி: S.அருணாசலம், ஆஸ்பத்திரி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். T.P: 2665, 2399. (4238)

## விற்பனைக்கு

பலஇன கலர்மீன்கள், மீன் தொட்டிகள், மீன்தொட்டிக்குரிய மோட்டர்கள், அழகுசாதனப் பொருள்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 40/17, சீனியர் லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (4243)

சண்டிலிப்பாய் பொன்னாலை வீதி, 8 பரப்புக்காணி சமதுண்டுகளாக விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஞ.சுதாகரன் 40/3, புகையிரதப் பாதை கிழக்கு ஒழுங்கை, கந்தர்மடம் யாழ்ப்பாணம். மது டச் வீதி, சண்டிலிப்பாய் (4265)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து (பாதிக் கோழி உட்பட), தினமும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (4262)

புறொயிலர் இறைச்சிக் கோழிகள், விற்பனைக்கு உண்டு. இலவசமாகச் சுத்தம்செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: சிவா, பருத்தித்துறை வீதி, வட்டக்குளம் முன்பாக, கட்டப்பிராய். (4273)

## புத்தகங்கள்

அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நூல்கள்: 1.நாடகம் எழுதுவது எப்படி? 2.யாழ்ப்பாணமா? கொழும்பா? நாடகம் 3.யாழ்ப்பாணம் சிறு கதைகள் 4.இலக்கியக் கட்டுரைகள் 5.வீடற்றவன் நாவலின் விளக்கமும் விமர்சனமும் இலக்கிய விமர்சனம், 6.ஒரு காதலின் கதை நாவல். (4268)

## தவறிவிட்டது

அச்செழு வடக்கு, நீர்வேலியைச் சேர்ந்த செல்வரத்தினம் சபேசன் என்பவரது வி.அ.அ.(இல.0903005471),தே.அ.அ(இல.743031369V),07.05.2002 அன்று A-9பாதையூடாக கொழும்பில் இருந்து யாழ்.வரும்வழியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (4270)

---

# முதலாவது பிறந்ததின வாழ்த்து

29-05-2002

HAPPY BIRTHDAY



## செல்வி ர.திவ்வியா

கோண்டாவில் கிழக்கு, 'ஸ்ரீ நாரயணா' இல்லத்தைச் சேர்ந்த

**திரு.திருமதி ரமணசுதன் அனுஷ்யா தம்பதிகளின**

**செல்வப்புதல்வி செல்வி ர.திவ்வியா**

அவர்கள் இன்று (29-05-2002) தனது முதலாவது பிறந்ததினத்தை தனது இல்லத்தில் வெகு குதூகலமாகக் கொண்டாடுகிறார்.

திவ்வியா பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழவேண்டுமென்று அனைவரும் மனமார வாழ்த்துகின்றார்கள்.

'ஸ்ரீ நாராயணா',
கோண்டாவில் கிழக்கு. (4261)

திரு.க.ரமணசுதன்,
திருமதி ர.அனுஷ்யா (அப்பா-அம்மா)

---

# நல்லின கால்நடை கொள்வனவு

கால்நடை அபிவிருத்தித் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதற்காக நல்லின ஆடு, மாடுகளைக் கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. கால்நடைப் பண்ணையாளர்கள் தம்மிடம் உள்ள கால்நடைகளை விற்பனை செய்ய விரும்பினால் உடனடியாகத் தமது பிரதேச கால்நடை வைத்திய அதிகாரியிடம் தொடர்புகொள்ளவும்.

கால்நடை வைத்தியர்,
செயற்கைமுறைச் சினைப்படுத்தும் நிலையம்,
திருநெல்வேலி.

(4267)

---

**B.A. PART I**
**B.A. PART II** } **விரிவுரைகள் ஆரம்பம் 01.06.2002**

1st In Com., G.A.Q. யாழ்ப்பாணம் / பேராதனை பல்கலைக்கழகங்களினால் இவற்றுக்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன. இப்பதிவினை மேற்கொள்ள A/L கலை, வர்த்தகம், விஞ்ஞானம், கணிதம் இவற்றுள் மூன்று பாடம் சித்தியடைந்தவர்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் தகுதியுடையவர்களாவர்.

1. இவற்றுக்கான பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினால் செய்து தரப்படும்.
2. இவற்றுக்கான விரிவுரைகள் ஆரம்பம்:01.06.2002.

நிர்வாகி
S.அருள்நங்கை. (4269)

புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

---


உ
சிவமயம்

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சித்திரபானு வருடம் வைகாசி 15ஆம் நாள் இன்று (29-05-2002) புதன்கிழமை காலை 7.45 மணி முதல் 8.48 மணி வரையுள்ள மிதுன லக்கின சுபமுகூர்த்த வேளையில்

எமது சிரேஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**தம்பித்துரை பத்மநிதி**
(நிதி)
அவர்களுக்கும்



எமது சிரேஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
**தமிழ்பிரியா**
(பிரியா)
அவர்களுக்கும்

செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் திருமணம் நிறைவேற திருவருள் கைகூடியுள்ளதால் தாங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

**திரு.மா.தம்பித்துரை தம்பதியினர்**
கலையரசி சன சமூக நிலையம்,
உடுப்பிட்டி வீதி, தொண்டைமானாறு.
T.P No. - 070 - 213052

**திரு.தேவராஜா தம்பதியினர்**
அறிவொளி வீதி, புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

*வரவேற்புபசாரம்:* மணமகன் இல்லத்தில் நடைபெறும்.
(இரு வீட்டார் அழைப்பு)

(4260)

---

# ஏழாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணுலகில் 03 - 02 - 1944



விண்ணுலகில் 14 - 06 - 1995

## அமரர் வ.சிவஞானம் (C.T.B.)

திதி:-29.05.2002

*ஐயா!*

பிரிந்தும் பிரியாத, மறைந்தும் மறையாத
உங்களின் நினைவுகளில்
என்றென்றும் வாழ்ந்திடுவோம்.

*"நிலா ஒளி"*
*சமரபாகு, பொலிகண்டி, V.V.T.*

குடும்பத்தினர்.

(4263)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



எமது வித்தியாலயத்தின் முன்னாள் ஆசிரியரும்
தற்போதைய எமது தீவக கோட்டக்கல்விப்
பணிப்பாளருமாகிய
**திரு.க.அரசரட்ணம்** அவர்களதும்
எமது வித்தியாலய ஆசிரியை
**செல்வி க.கலாநிதி** அவர்களதும்
பாசமிகு தந்தையாகிய

## அமரர் கனகராசா

(ஓய்வுபெற்ற விவாகப் பதிவாளர்)

அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*யா/நெடுந்தீவு மகாவித்தியாலய சமூகம்.*


(4264)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

30-05-2002

தோற்றம் 27 - 11 - 1915



மறைவு 30 - 04 - 2002

## அமரர் தம்பு தங்கராஜா

(சிங்கப்பூர் தங்கராஜா - அல்வாய்;
சாம்ராட்சியப் பகுதி
நிர்வாக உத்தியோகத்தர் - சிங்கப்பூர்)

**பாசத்துடனும் பண்புடனும் எமை வளர்த்து
இப்பாரினில் எங்களை வாழவைத்த
எங்கள் அன்புப் பப்பாவே!
உங்கள் ஆன்மா சாந்தியடைய
இறைவனைப் வேண்டுகின்றோம்.**

எங்கள் குடும்பத் தலைவனின் திடீர் பிரிவினால் துயருற்ற வேளையில் எமக்கு ஆறுதல் கூறிய, அஞ்சலி தெரிவித்த அன்பு நெஞ்சங்களுக்கும் இறுதிக்கிரியைகளின் போது கலந்து உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் நாளை (30-05-2002) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியங்களிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

*'ஆனந்தவாசா',*
*அல்வாய் கிழக்கு,*
*அல்வாய்.*

(C/22314)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# அழிவின் விளிம்பில் நாம்......!

இன்று உலகெங்கும் ஒரே பதற்றம், யுத்த பீதி, குண்டு வெடிப்புக்கள், நாடுகளுக்கிடையேயும் நாடுகளிற்கு உள்ளேயும் வீடுகளிற்கிடையேயும் வீடுகளுக்குள்ளேயும் நல்லுறவில்லை. இடைவெளிகள், முரண்பாடுகள், வேற்றுமைகள் அதிகரிப்பு, தொழில்களிலிருந்து வெளியேறும் கழிவுப்பொருள்களால், ஏனைய வழிகளால், நிலத்தடி அணுகுண்டு வெடிப்பால் இயற்கை அன்னைக்கு, பூமித்தாய்க்கு, மனித இனத்திற்கு ஏற்படும் பேரழிவு. இந்நிலையிலும் நாடுகள் அபிவிருத்தியடைந்துவிட்டன. மனிதனின் வாழ்க்கைத் தரம் உயர்ந்துவிட்டது. மனிதன் மேம்பாடடைந்துவிட்டான். சமூகம் முன்னேறிவிட்டது என்றவாறு படிக்காதவர்கள் மட்டுமல்ல தம்மைப் படித்தவர்கள், கலவிமான்கள், புத்திஜீவிகள், பேராசிரியர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் பேசுகிறார்கள். பத்திரிகைகளில் எழுதுகிறார்கள். பட்டினங்களிலே பல மாடிக்ஹெறாட்டல்களில் மது, மாது, ஆட்டம், கேளிக்கை, ஆபாச வீடியோக் காட்சி, எய்ட்ஸ் நோயின் ஆதிக்கம், கொலைகள், கபடம் கேட்டல், மனிதனுக்கு அழிவை ஏற்படுத்தும் சிகரட், மது...களின் உற்பத்தி அவற்றைச் சந்தைப்படுத்தக் கவர்ச்சியான விளம்பரம், கபடமான வியாபாரம், கணவனை மனைவி, மனைவியைக் கணவன் பாலியலில் திருப்தி செய்யமுடியவில்லை என்பதற்காக விவாகரத்து; இத்தகையோருக்கு பிறபவர்களால், ஒழுங்கீனங்கள் இவை யாவும் அபிவிருத்தியா? முன்னேற்றமா? மேம்பாடா?

இந்நிலைக்கு இட்டுச் சென்றவர்கள், இவற்றைப் போற்றுபவர்கள், இவற்றில் ஈடுபடுபவர்கள் கல்விமான்களா? புத்திஜீவிகளா? பேராசிரியர்களா?

இன்றைய பாடசாலை, பல்கலைக்கழகப் படிப்புக்கள் ஆற்றும் பங்களிப்பு என்ன?

இவைகளுக்கு விடை காண்பதா? அல்லது உலகில் எப்படியும் நடமாடிவிட்டு இது என் தலைவிதி என்று சொல்லிவிட்டு நாய்களைப் போல் தெருக்களில் மடிவதா, இவைகளுக்கு விடைகாண விளைவோருக்கு இவ்வாக்கம் மிகவும் உறுதுணையாகவிருக்கும். மேலும் சிந்தனையைத் தூண்டும். இப்பணி சிறப்புற எல்லோரினதும், விமர்சனங்கள், அபிப்பிராயங்கள், கருத்துக்கள் ஆகியவை அன்புடன் வரவேற்கப்படுகின்றன.

உலகில் பிறந்த எவனும் துன்பப்பட விரும்புவதில்லை. எனினும் தத்தமது துன்பத்திற்கு பிறரின் மீது குற்றஞ்சாட்டும் தன்மை தனிமனிதன், அரசியல் கட்சிகள், அரசாங்கங்கள், நாடுகள் என்ற எல்லா மட்டங்களிலுமுளளது. குற்றஞ்சாட்டிக்கொண்டு மட்டுமிருந்துவிடல்தான் பரிகாரமா? முன்பு செய்யப்பட்ட செயல்களையும, வாழ்ந்த முறைகளையும், அதன் விளைவுகளையும் இன்று செய்யப்படுகின்ற செயல்களையும், வாழ்கின்ற முறைகளையும், இவற்றின் விளைவுகளையும் ஒப்பிட்டு பார்ததாகுதல் தீர்வுகாண முயலவதில்லை.

மனிதன் இயற்றிய சட்டங்கள் பொய்க்கலாம். ஆனால், இயற்கைச் சட்டங்கள், நியதிகள் ஒருபோதும் பொய்ப்பதில்லை. தீக்குள் விரலை வைத்தால் சுட்டு எரித்துவிடும். பணக்காரார், ஏழை என்றோ, படித்தவர், பட்டம் பெற்றவரென்றோ பக்கச்சார்பு காட்டப்படுவதில்லை. பெரியகுற்றங்களைச் செய்துவிட்டு செல்வாக்கினால், பணத்தினால் மனிதர்கள் எனறு சொல்லப்படுபவர்களிடமிருந்து தப்பிவிடலாம். ஆனால், இயற்கையின் தண்டனையிலிருந்து தப்பிவிடமுடி

## ஆத்மசொரூபன்

யாது. துன்பப்பட நாம் விரும்பாமலிருந்தால் மட்டும் போதாது துன்பத்துக்குரிய செயல்களை நாம் செய்யக் கூடாது. அவற்றைச் செய்பவர்களை நாம் எக்காரணங்கொண்டும் போற்றக் கூடாது. "AS you think so you are" யாத்பா[illegible] தத்பவதி, "எதை எண்ணுகிறாயோ அதுவாவாய்" இனறு உலகளாவிய துன்பத்திற்கு இதுவே காரணம். துன்பம் ஏற்படுகின்றதென்றால் நாம் துன்பம் விளைவிக்கும் எண்ணங்களை எண்ணுகின்றோம், செயல்களைச் செய்கின்றோம், போற்றுகின்றோம் என்பதுதான் அர்த்தம். "தீதும் நன்றும் பிறர் தரவாரா"

கிராமமே தீப்பற்றி எரியும்பொழுது எனது வீட்டை மட்டும் தணணீர் ஊற்றிக்காப்பற்றிவிடலாம் என்று எண்ணுவது எவ்வளவு அறிவீனம். எனவே, கிராமத்திலேற்பட்ட தீயனைத்தையும் அணைக்க முயல்வதே புத்திசாலித்தனமாகும். அதுவே என்னுடைய வீட்டுத் தீயையுமணைக்கும் மத, இன, மொழி, பிரதேசம் உள்ளடக்கிய குழுக்கள் தத்தமது குழுக்களைப் காப்பாற்றிப்[illegible]பாடுவோமென்று எண்ணியே முயல்கிறார்கள், யுத்தங்களை புரிகிறார்கள், இத்தகைய குறுகிய எண்ணங்கள்தான் அவர்களைச் சார்ந்த குழுவினரின் அழிவிற்கே வித்திட்டு விடுவதை உலகளாவியரீதியில் காணமுடிகிறது. (பின்லேடன்)

ஞானிகளின், தீர்க்கதரிசிகளின் போதனைகளெல்லாம் மக்களை ஒன்றுபடுத்த அவர்களிடையே இடைவெளியை , முரண்பாடுகளை, வேற்றுமைகளை குறைக்க முயன்றன. ஆனால், இன்று மனிதன் என்று தன்னைக் கூறிக்கொள்பவனோ இதற்கு எதிர்மாறாக, அநத தீர்க்கதரிசிகளின், ஞானிகளின் பெயரால் செயற்படுகின்றான். இது எவவளவு வெட்கக்கேடானது. எந்த ஒரு குழுவும் இந்த ஞானிகளை, தீர்க்கதரிசிகளை, இவர்களினது போதனைகளை தமக்கு உரியது என்று கூறி, சொந்தங் கொண்டாட முடியாது. இவையனைத்தும் எல்லோருக்கும் உரியது. பொதுவானது. அவர்களது உட்பொருளை, பொதுக்கருத்தை அறிய முடியாது உலகைக் குழப்பும் அறியாமை மட்டும் எமக்குரியது. குறுகிய எண்ணமுடைய குழு உணர்வுகள் உண்மைகளை அறிந்து தெளிவு பெறுவதற்குத் தடையாக உள்ளன. உண்மைகளையறிந்து தெளிவு பெறுவதற்கு நாம் முதலில் விருப்பு, வெறுப்பு என்பவற்றிலிருந்து வெகுதூரத்திற்கு விலகிச்செல்ல முயல வேண்டும். எவ்வளவிற்கெவ்வளவு தூரம் விலகிச்செல்கிறோமோ அவ்வளவிற்கவ்வளவு தெளிவு ஏற்படும். தன்னுடைய பிள்ளை என்ற விருப்பை ஏற்படுத்திக்கொள்ளும் தாய் அப்பிள்ளை செய்யும் தவறுகளைக் கண்டிக்காது விடுவதன் மூலம் அப்பிள்ளை அழிவதை நாம் காண்கின்றோம். உண்மையான அன்பு செலுத்துவதற்குக் கூட விருப்பு வெறுப்பிலிருந்து விலகிச் சென்றுதான் ஆகவேண்டும். விருப்பு வெறுப்பிலிருந்து விலக முடியாதவரை தெய்வீகத்தையும் உணர முடியாது. இந்நிலையிலேற்படுத்தும் வழிபாடுகளெல்லாம் கால விரயமும், தவறான வழி காட்டல்களும்தான். இன்று வழிபாட்டிடங்களெல்லாம் கட்டடமளவில் பெரியதாகவும் புறக்கவர்ச்சியுடையதாகவும் மட்டும் உள்ளனவே தவிர, மனிதனின் அகக்கவர்ச்சியைக் காண முடிவதில்லை. காலினது ஆரோக்கியத்தைப் புறக்கணித்து விட்டு உடலினது ஆரோக்கியத்தைப் பற்றிப் பேசமுடியாது. ஏனெனில் கால் உடலிலிருந்து வேறுபட்டதல்ல. இதே போலத்தான் நாம் உலகிலிருந்து வேறுபடடவர்களல்லர். மனிதனிடத்தே உள்ள மாபெரும் குறைபாடு எம்மை உலகத்திலிருந்து வேறுபடுத்திப் பார்ப்பது, உலக நன்மையைப் புறக்கணித்துவிட்டு எமது நன்

## சிந்தனைத் தொடர்

மையை மட்டும் பார்க்க முனைவது. குடுமபத்தின் நலனைப் பேண முனைபவனின் நலனும் பேணப்படும். இது இயற்கை நியதி. "உலகம் கெட்டு விட்டது" என்று பலர் கூறுவதைக் கேட்டிருக்கிறோம. உலகத்திலிருந்து தம்மைப் பிரித்துப் பார்க்கின்றார்கள் என்பதை அது எடுத்துக்காட்டுகிறது. அவ்வாறு பிரித்துப் பார்க்காதவனோ உலக நன்மைக்காக ஏதோ பங்களிப்பைச் செய்து கொண்டேயிருப்பான்.

அழிவின் விளம்புக்கு நாம் எப்படி வநது சேர்ந்தோம்?

(அடுத்த வாரம் தொடரும்)

**100 இளைஞர்கள் இருந்தால் உலகையே மாற்றி அமைத்துவிடலாம் - சுவாமி விவேகானந்தர்!**

**ஆமாம்... தனது மைந்தர்கள் தனக்கும் மைந்தர்களுக்கும் இயற்கை அன்னைக்கும் அழிவைத்தேடித் தரும் செயல்களில் ஈடுபடுகிறார்கள் என்று பூமித்தாய் கண்ணீர் வடிக்கிறாள். இதைத் தடுக்க தம்மையே அர்ப்பணிக்கும் சிங்கம்போல் கர்ஜிக்கும் வீர தீரமுடைய இளைஞர்களே தேவை...**

**'அழிவின் விளிம்பில் நாம்...!' என்ற விடியலைத்தேடும் - இந்த சிந்தனைத் தொடர் - புதன்கிழமைதோறும் வெளிவரும்.**

## ஆங்கில தினப் போட்டிகள்

வலிகாமம் தெற்கு,மே29

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் ஆங்கில தினப் போட்டிகள் பாடசாலை மட்டத்தில் ஜூன் 15ஆம் திகதிக்குள்ளும் கோட்ட மட்டத்தில் ஜூலை 6 - 12ஆம் திகதிக்குள்ளும் வலய மட்டத்தில் ஜூலை 17 - 20ஆம் திகதிக்குள்ளும் நடைபெறுமென ஆங்கிலபாட உதவிக் கல்விப் பணிப்பாளர் க.முத்துராஜா அறிவித்துள்ளார். (க-152)

## அங்குரார்ப்பணம்

கொழும்புத்துறை,மே29

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் அண்மையில் பாசையூர் கிராமத்தில் சிறுவர் பாதுகாப்புக் கழகம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப் பட்டது.

அத்துடன் இக்கிராமச் சிறுவர்களின் கல்வி மேம்பாட்டுக்கென பாடசாலை உபகரணங்களும் மேற்படி நிதியத்தினால் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன. (க-ரி)

## வீதி புனரமைப்பு

குருநகர்,மே29

குருநகர் சென்ஜேம்ஸ் மகா வித்தியாலய வீதியும், றெக்கிளமேசன் மத்தியகிழக்கு குறுக்கு வீதியும் செப்பனிடப்பட்டு வருகின்றன. (க-51)

## பல்கலையில் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மே29

யாழ்.பல்கலைக்கழக அரசறிவியல் ஒன்றியத்தின் ஏற்பாட்டிலான கருத்தரங்கு ஒன்று. இன்று பிற்பகல் 3 மணிக்கு பல்கலைக்கழக புவியியற்றுறை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் 'இன்றைய உலகில் சர்வதேச வட்டங்களின் பங்கு' எனும் தலைப்பில் யாழ்.மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா கருத்துரை வழங்கவுள்ளார். (க-10)

## ஒத்திவைப்பு

வலி.தெற்கு,மே29

வலிகாமம் தெற்கு பிரதேச செயலகத்தில் நாளை வியாழக்கிழமை நடைபெற இருந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், விவசாயக்குழுக் கூட்டம் என்பன தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாகவும் கூட்டம் இடம்பெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (க-152)


## கண்ணீர்க் காணிக்கை

எமது கல்லூரி ஆசிரியை செல்வி அன்பு சுலோஜினி மார்க்கண்டு அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி இராசமலர் மார்க்கண்டு**

அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீரைக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அவரது ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை,
யா/பொன்பரமானந்தர் [illegible] வி. குரும்பசிட்டி.

(4278)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 24 - 03 - 1950



உதிர்வு 08 - 06 - 2001

**அமரர் சின்னத்தம்பி கனகசபை**

திதி: 29.05.2002

பண்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் விளைநிலமாய்
பாரினிலே வாழ்ந்தீரே!
உங்கள் வதனமுகம் காணாமல்
வாடி நாம் நிற்கையிலே
வருடமொன்று மறைந்ததுவே!

*அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*புத்தூர் வடக்கு,*
*புத்தூர்.*
- குடும்பத்தினர்.

(4275)


## கண்காணிப்புக் குழுவுக்கு 254 முறைப்பாடுகள்

கொழும்பு,மே29

சர்வதேச கண்காணிப்புக் குழுவுக்கு 254 முறைப்பாடுகள் இதுவரை கிடைத்திருக்கின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. (க-4)

## பணிக்களங்களுக்கு புதிய குருமார்

யாழ்ப்பாணம்,மே29

மருதனார்மடம் கிறிஸ்தவ குருத்துவக்கல்லூரியில் நான்கு வருட இறையியல் பயிற்சியை முடித்துக்கொண்ட நான்கு குருமார்கள் பணிக்களங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். எ.எஸ்.ரூபன் (தெல்லிப்பழை), ஏ.ஆர்.றொகான் (வரணி), எஸ்.எஸ்.ஜோன் (ஏழாலை), எஸ்.ஏ. செல்வந்தா (அக்கராயன் - கிளிநொச்சி) ஆகிய நான்கு குருமார்களே குருத்துவப்பணிக்கு அமர்த்தப்பட்டவர்கள். இவர்கள் தென்னிந்தியச் திருச்சபைக் குருமார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

(க-152)

## பாடசாலைக்களுக்கு நிதி ஒதுக்கீடு

வடமராட்சி கிழக்கு,மே29

வடமராட்சி கிழக்கில் மக்கள் மீளக்குடியமர்ந்துவரும் இடங்களில் தற்பொழுது செயற்படத் தொடங்கியுள்ள 3 பாடசாலைகளுக்கு உடனடி புனரமைப்பு வேலைகளுக்காக வடக்கு - கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

உடுத்துறை மகா வித்தியாலயத்திற்கு 7லட்சத்து 20ஆயிரம் ரூபாவும், செம்பியன்பற்று அ.த.க.பாடசாலைக்கு 2லட்சத்து 50ஆயிரம் ரூபாவும்,மருதங்கேணி இ.த.க. பாடசாலைக்கு 90 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

யுத்தத்தினால் சேதமடைந்த இப்பாடசாலைகளைப் புனரமைப்புச் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (க-182)


உ

மீசாலை வடக்கு தட்டான் குளம்

அருள்மிகு திருநீலகண்டப் பிள்ளையார் கோயில்

## சம்புரோக்ஷண கும்பாபிஷேகம்

இன்று (29.05.2002) புதன்கிழமை மாலை கும்பாபிஷேகக் கிரியைகள் ஆரம்பமாகும். நாளை (30.05.2002) வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு சம்புரோக்ஷண கும்பாபிஷேகம் நடைபெறும்.

அடியார்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(4272) ஆலய பரிபாலன சபையினர்.



## இரண்டாவது ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 23 - 03 - 1935



மறைவு 29 - 05 - 2000

**அமரர் நாகேசு சோமசுந்தரம்**

அன்புடனே எமை வளர்த்த ஐயாவே!
"ஐயா" என்று அழைக்க எமக்கிங்கே யாருமில்லை!
ஆற்ற முடியாத துயரில் நாம் அலறுகின்றோம் ஐயா!
ஈராண்டு சென்றாலும் எம் இதயத்தில் என்றும்
நீங்காது நிலைத்து நிறைந்திருப்பீர்கள் ஐயாவே!
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

உங்களை மறக்காமல் துயரோடு வாழும்:
மனைவி இலட்சுமி,
மக்கள், பேரப்பிள்ளைகள்.

*91/6, காரைக்காட்டு லேன்,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*

(4271)

# நாரிநோ வந்தால் என்ன செய்வது?

எம்மவர்களால் இது நாரிநோ, நாரிக்குத்து, முதுகுத் தெண்டல் எனப் பல பெயர்களால் குறிப்பிடப் படுகின்றது. எமது உடலின் பின் புறத்தில் அதன் கட்டமைப்பிற்கு உறுதியை வழங்கும் அமைப்பாக முள்ளந்தண்டு என்புகள் அமைந்துள் ளன. இவை ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கப்பட்ட ஒரு தொடர் வரிசை யாக (Vertebcal Column) ஒழுங்க மைககப்பட்டுள்ளன. இது நான்கு முக்கிய பகுதிகளாக வகைப்படுத்தப் படும்.

☛ கழுத்துப் பகுதியில் அமைந் துள்ள என்புகள் (Cervical Spines - 07 என்புகள்)

☛ நெஞசுப் பகுதியில் அமைந் துள்ள என்புகள் (Thoracic Spines - 12 என்புகள்)

☛ நாரிப் பகுதியில் அமைந்துள்ள என்புகள் (Lumbar Spines - 05 என்பு கள்)

☛ பிட்டப் பகுதியில் அமைந் துள்ள என்புகள் (Sacrum - 07 என்புகள்)

ஐந்து என்புகளும் ஒன்றிணைந்து ஒரு தனி என்பு போன்று செயற்படும். இதன் Coccy x என்று அழைக்கப் படும் பரிணாம வளர்ச்சியில் அழி வடைந்துவரும் மனித உடலிற்கு முக்கியமற்ற வால் பகுதிக்குரிய என்புகள் காணப்படுகின்றன.

கழுத்து, நெஞ்சு, நாரிப் பகுதி களில் காணப்படும் என்புகளுக் கிடையே அசைவுகள் ஏற்படக்கூடிய வகையில் முள்ளந்தண்டு என்புகள்

**சுகநலம்**

அமைந்துள்ளன. இவ்வசைவுகள் கழுத்துப் பகுதியில் கூடுதலாகவும் அடுத்தபடியாக நாரிப் பகுதியில் கூடுதலாகவும் உள்ளன. இந்த என்பு களுக்கிடையே காணப்படும் நீள் வட்ட வடிவிலான கசியிழையம் (Inter Vertebra Disc) அதிர்ச்சி உறிஞ்சிக ளாக (Shock Absorber) செயற்படு கின்றன. இந்த என்புகள் முன்புறம், பின்புறம் மற்றும் இரு பக்கப்புறங்களி லும் நீண்ட நார்களினால் உறுதியா கப் பின்னிப்பிணைக்கப்பட்டுள்ளன.

முள்ளந்தண்டு எமது உடலில் பிரதான பகுதிக்குரிய அச்சாணி என்புகளாகத் தொழிற்படுவதுடன் உடலின் முன்நோக்கிய வளைவுக் கும் பக்கவாட்டான வளைவிற்கும் ஓரளவு பின்நோக்கிய வளைவிற்கும் இடமளிக்கின்றது. எமது முள்ளந்தண் டினை அதற்குரிய கட்டமைப்பில் வைத்திருப்பதற்கும் அதன் அசைவு இயக்கத்திற்கும் பின்புறத்தில் நீண்ட உறுதியான தசைகள் காணப்படுகின் றன. முள்ளந்தண்டு என்புகளில் ஒரு பகுதி மோதிரம் போன்று வளைந்து காணப்படுவதினால் நடுவில் ஒரு குழாய்போன்ற இடைவெளி ஏற்படு கின்றது.

இதனூடாக முன்னாண் நரம்புகள பாதுகாப்பான நிலையை மூளையில் இருந்து தமக்குரிய உறுப்புக்களுக் கும் அங்கங்களிற்கும் தொடர்பினை ஏற்படுத்துகின்றன.

**நாரி நோவின் காரணிகள்**

முள்ளந்தண்டின் பின்புறத் தசை கள் பாதிக்கப்பட்டால் அல்லது முள்ளந்தண்டினைப் பின்னிப் பிணைந திருக்கும் நார்கள் பாதிக்கப்பட்டால் அல்லது முள்ளந்தண்டு என்புகள் பாதிக்கப்பட்டால் அல்லது அதனி டையே இருக்கும் கசியிழையங்கள் பாதிக்கப்பட்டால் அல்லது அதனூடே செல்லும் முன்னாண் நரம்புகள் பாதிக கப்பட்டால் நாரிநோ ஏற்படக்கூடும் என்பதனை மேற்படி கட்டமைப்பில் இருந்து விளங்கிக்கொள்ளலாம்.

**ஏற்படும் பாதிப்புக்கள்**

★ பொறிமுறை விசைகளின் தாக் கம் (Machanical Low back Pain)

★ அழற்சி (Inflammatory)

★ உடலில் ஏற்படும் பொதுவான நோய்கள்.

★ போசணை, விற்றமின், கனி யுப்புக் குறைபாடுகள் முள்ளந்தண்டு என்புகளில் ஏற்படுத்தும் தாக்கங்கள்.

★ புற்றுநோய் ஆகிய காரணங் களால் ஏற்படுகின்றன.

முள்ளந்தண்டுப் பகுதியினைப் பாதிக்காத சில காரணிகள் நாரி நோவாகப் பிரதிபலிக்கக்கூடும். அவற றில் முக்கியமான விவரங்களைக் குறிப்பிடும்போது

★ வயிற்றினுள் இருக்கும் சில உறுப்புகளில் (சிறுநீரகம், சதையி, கர்ப்பப்பை, இரைப்பை) ஏற்படும் பாதிப்புகளினால் உருவாகும் வேதனையும் நாரிநோவாக வெளிகாட் டப்படக்கூடும்.

★ உளவியல் தாக்கங்கள், மன அழுத்தங்களின் வெளிப்பாடாகவும் நாரிநோ ஏற்படக்கூடும் (Paychogenic Pain)

அத்துடன் ஒரு சிலர் சில நன் மைகளைப் பெறுவதற்காக

உதாரணம்:

(I). கடுமையான பணியில் இருந்து மாற்றம்.

(II). கடுமையான பணியில் இருந்து ஓய்வு.

(III). மற்றவர்களின் கவனிப்பைப் பெறுதல்.

(IV). நட்டஈடு பெறுதல்.

போன்றவற்றிற்காக நாரிநோ ஏற் பட்டது போன்று நடிக்கக்கூடும் (Fun ctional Low back Pain).

நாரிநோக்கள் தடிமன், காய்ச் சல், வைரஸ் காய்ச்சல், மலேரியாக் காய்ச்சல் போன்றவற்றுடன் இணைந் ததாகவும் ஏற்படுகின்றன. இது தொற்று நீக்கிய ஒரு சில நாட்களிற்குள் குண மடைந்துவிடும்.

**பொறிமுறை விசைகளின் தாக்கத்தினால் ஏற்படும் நாரிநோ (MACHANICAL LOW BACK PAIN)**

பெரும்பான்மையான நாரிநோக் களிற்கு இது காரணமாக விளங்கு கின்றது.(90%) இது கடுமையான பாரம தூக்குதல், கடுமையாகக் குனிந்து வளைந்து வேலை செய்தல், நீண்ட நேரம் பார ஊர்திகள் ஓட்டுதல், சீரற்ற முறையில் நீண்ட நேரம் அமர்ந் திருத்தல் போன்ற பல செயற்பாடு களின் விளைவாக ஏற்படுகின்றது. மேற்படி விடயங்கள் ஒருவரின் தொழில் அல்லது கடமைகளிலும் அடங்கக்கூடும்.

இது பொதுவாக 1-2 கிழமைக் குள் தாமாக எதுவித சிகிச்சையும் இன்றிக் குணமடைந்துவிடும். ஒரு சிலருக்கு 1-3 மாதங்கள் நீடிக்கக் கூடும். இதைக் குறுகிய கால நாரி நோ(Acute Low back Pain) என்றும் குறிப்பிடுவார்கள் மிகமிகச் சொற்ப தொகையினருக்கே (3%) இது நீண்ட கால நாரிநோவாக (Chronic Low Back Pain) அமையும்.

**குறுகிய கால நாரிநோ (ACUTE LOW BACK PAIN)**

இங்கு முள்ளந்தண்டுப் பகுதியில் தற்காலிகமான பாதிப்புகளே ஏற்படும். எதுவித நிரந்தர பாதிப்புகளும் ஏற் படுவதில்லை. இதில் பின்புறத் தசை கள் இறுக்கமடைந்து (Muscle Sp- asm) காணப்படக்கூடும்.

**நோய் வரலாறு**

★ நடுநாரியில் நோ ஏற்படும்.

★ சடுதியாகத் திடீரென நோ ஆரம்பித்திருக்கும்.

★ பிட்டப் பகுதிக்கும் தொடைப் பகுதிக்கும் நோ பரந்து செல்லக் கூடும்.

★ ஒரு பொழுதும் முழங்காலிற் குக் கீழ் நோ பரந்து செல்வதில்லை.

★ நோ பாரந்தூக்குதல், குனிதல் போன்றவற்றினால் அதிகரிக்கக்கூடும்.

★ பாதிப்புக்குள்ளானவர் பொது வாக, சுகதேகியாக இருப்பார்.

★ வயது 20-50 இற்குள் இருக் கும்.

**உடற் பரிசோதனை**

★ நாரியில் அழுத்தும்போது வேதனையேற்படும். (Loeal Fender ness)

☆ ஒரு பக்கம் நாரி வளைந்தி ருக்கும்.

☆ பொதுவாக நாரி முன்நோக்கி வளைந்திருக்கும். இவ்வளைவு அற் றுப்போய் நிமிர்ந்த நேரான நாரியாக இருக்கும்.

☆ நோயாளி படுத்திருந்த நிலை யில் முழங்காலினை 90பாகை மடித் துப் பின்னர் இடுப்பினை 90 பாகை மடித்து பின்னர் மடித்திருக்கும் முழங் காலினை நிமிர்த்தும் பரிசோதனை செய்யும் போது (Straight Leg Rai- sing Test) வேதனை ஒரு பக்கம் மட்டும் உருவாகும்.

☆ நரம்புத் தொழிற்பாடுகளில் எது வித பாதிப்புகளும் இருக்காது.

எதுவித ஆய்வுகூடப் பரிசோதனை களும் செய்யவேண்டியதில்லை. வேறு நோய்களின் பாதிப்புப் பற்றிய சந்தேகம் இருந்தால் கதிர்வீச்சுப் படம் (X-Ray) பிடித்துப் பார்த்தும் ESR போன்ற குருதிப் பரிசோதனை, UFR போன்ற சிறுநீர்ப் பரிசோதனைகளும் செய்து பார்க்கலாம்.

***சிகிச்சை***

★பாதிக்கப்பட்டவருக்கு நோயின தன்மையினை விளக்கிக்கூறி உற் சாகமூட்டுதல்.

★சிரமமற்ற நாளாந்த நடவடிக்கை களை, உடல் இயக்கத்தினை மேற் கொள்ளத் தூண்டுதல்.

★ வேதனை கடுமையாக இருப் பின் படுக்கையில் ஓய்வு வழங்குதல். இது 1-2 நாள்கள் மட்டுமே மட்டுப் படுத்தி வழங்கப்படல் வேண்டும்.

★ குறுகிய கால வலிநிவாரணி கள் வழங்குதல். உதாரணம்: **PTC, Brufen, Ponstan, Baltarin.**

★ வலி சிறிது குறைவடைந்த பின் உடற்பயிற்சி குறிப்பாக முதுகுத் தசைகளுக்குரியவை வழங்கப்படல வேண்டும்.

உதாரணம்: நடத்தல், மிதிவண்டி செலுத்துதல், நீந்துதல் பொதுவாக 1-2 கிழமைகளுக்குள் பூரண குணம டைந்துவிடும். *(தொடரும்)*

---

**இளைஞர் மன்றத்தினர் கலாசார சுற்றுலா**

யாழ்.மாவட்டத் தேசிய இளைஞா சேவைகள் மன்ற அங்கத்தவர்கள் அடுத்த மாத முதல் வாரத்தில் தென் பகுதிக்கான சுற்றுலா பயணமொன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

யாழ்.மாவட்ட இளைஞர் சேவை கள் கழக சம்மேளனம் ஒழுங்கு செய்துள்ள இச்சுற்றுலாப் பயணம் 15 நாள்கள் வரை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. நாட்டின் ஏனைய பகுதிகளுடனான தொடர்புகளை வளர்ததுக்கொள்ளவும் - கலாசாரப் பரிமாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ளு முகமாகவும் - இச்சுற்றுலா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது.

தென்பகுதியின் முக்கிய இடங் களுக்கு விஜயம் செய்யும் இவர்கள், அவ்விடங்களில் தமது கலை நிகழ் வுகளை ஆற்றுகை செய்வர் எனத் தெரிவிக்கப்பட்டது. சுற்றுலாவில் கலந்துகொள்ளும் அங்கத்தவர்களுக் கான கலந்துரையாடல் ஒன்று நாளை மறுதினம் காலை 9 மணிக்கு யாழ். மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றத் தில் நடைபெறவுள்ளது. (க-9)


**தெல்லிப்பழை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்**

(வ-து)

**உற்பத்தி நிலைய கட்டடம் அமைத்தல் கூலி கூறுவிலை கோரல்**

எமது சங்கம் தெல்லிப்பழைப் பகுதியில் அமைக்கவுள்ள 40'x25' அளவுடைய உற்பத்தி நிலையக் கட்டடத்துக்கான கூலி கூறுவிலை, தகுதியுடைய ஒப்பந்தகாரரிடமிருந்து கோரப படுகின்றது. மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணம் ரூபா 50/= செலுத்தி படிவம் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் 15.06.2002ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் சங்கத்தில் நேரடியாகச் சமர்ப்பித்தல் வேண் டும். தகுதியில்லாத விண்ணப்பங்களும், விண்ணப்ப முடிவு திகதிக்குப் பின்னர் கிடைத்த விண்ணப்பமும் நிராகரிக்கப்படும். கட்டட வரைபடத்தினை காரியாலயத்தில் வேலை நேரத்தில் பார்வையிடலாம்.

*8ஆம் கட்டை,*
*துர்க்காபுரம்,*
*தெல்லிப்பழை.* (4276)

தலைவர்,
தெல்லிப்பழை பனை, தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.


# உளவு பார்க்கும்.....

(03ஆம் பக்கத் தொடர்)

கள் உயிருள்ள எலிகள் என்பது முக்கியம். இது 'ரோபோ'கள் இல்லை. நமது கண்கள் செய்கிற வேலையை இந்த எலிகள் செய்கின் றன. நம்மால் இடிபாடுகளில் நுழைந்து, யார் சிக்கி இருக்கிறார்கள் என்பதை நமது கண்களால் பார்க்க முடிய வில்லை. அந்த வேலையை இந்த எலிகள் செய்கின்றன. அதாவது மனிதனின் 'கண்'ணாக எலி செயற் படுகிறது.

இந்த எலிகளை பழக்கவேண் டும்; பயிற்சி அளிக்கவேண்டும், பல வகையில் இதற்காக எலிகளை ஆராய்ச்சியாளர்கள் பழக்குகிறார் கள். உயரத்தில் ஏற அல்லது தாவ வும் பழக்குகிறார்கள். இருட்டில் மட்டு மல்லாமல் வெளிச்சத்திலும் ஓடப் பழக்கியிருக்கிறார்கள். இப்போது 1640 அடி தூரம் வரை நம் இஷ்டப் படி எலிகளைக் கட்டுப்படுத்த முடிகி றது.

இந்த முயற்சி நல்ல வெற்றிகர மாக அமைந்துவிட்டால், பல வகை களில் நமக்குப் பயன் ஏற்படும். மனி தனால் நுழைய முடியாத இடத்தில் எலி நுழைந்து, தேவையான செய்தி களை நமக்குத் தரும்; நமக்கு துரோகம் செய்யாது. இனி நாம் மற்ற வர்களை இவர் ஒரு எலி என்று கேலி செய்யமுடியாது. நாய், பூனை போல இந்த எலியும் நம்முடைய கட்டுப்பாட்டில் இருந்து கொண்டு நமக்குப் பயன்படும் ஒரு பிராணி யாக செயற்படும்.

பிராணிகளின் இயற்கையான திறமையை பல வேலைகளுக்கு இப்போதும் நாம் பயன்படுத்தி வரு கின்றோம். நாயின் நுகரும் திறமை யைத் துப்பறியும் வேலைக்கு பொலீ ஸார் பயன்படுத்துகின்றனர். விண் வெளி ஆராய்ச்சிக்கு நாய்களைப் பயன்படுத்தியது பற்றி நீங்கள் கேள் விப்பட்டிருக்கலாம்.

ஆனால், ஒரு பிராணியின் மூளையை கட்டுப்படுத்தி, நமக்கு சாதகமாக பயன்படுத்தும் முயற்சி இதுதான் முதலாகும். இதுபோல பல பிராணிகளை நமது 'கட்டுப்பாட்டில்' உள்ள பிராணிகளாக பழக்க முடி யுமா? என்று பல ஆராய்ச்சிகள் நடை பெற்று வருகின்றன. இது சரியா, தவறா என்பது பற்றிக்கூட ஆராய்ச் சியாளர்கள் மத்தியில் விவாதம் நடை பெற்று வருகின்றது. பிராணிகளை வதைப்பதாக இது அமையாதா என்று சிலர் கேட்கத்தொடங்கிவிட்டார்கள். சர்க்கசில் கூட பிராணிகளை பயன் படுத்தக்கூடாது என்ற குரல் ஓங்கி ஒலிப்பது உங்களுக்குத் தெரிந்தி ருக்கும்.

பிராணிகளுக்கு இப்படி எதிர்ப்பு என்றால், மனிதர்களை இந்த மாதிரி 'கட்டுப்படுத்தும்' ஆராய்ச்சி என்றால் எவ்வளவு எதிர்ப்பு இருக்கும்? அது வும் மற்றவர்களுடைய மூளையைக் கட்டுப்படுத்துகின்ற முயற்சியை பலர் எதிர்க்கிறார்கள். அது அடிப்படை மனித உரிமையைப் பறிப்பதாகும் என்று கூறுகிறார்கள்.

இது எப்படியோ, மற்ற உயிரினங் களின் மூளையை விஞ்ஞானத்தின் மூலம் கட்டுப்படுத்தலாம் என்ற கண்டுபிடிப்பு ஒரு நல்ல விஞ்ஞான வளர்ச்சி என்பதை யாரும் மறுக்க முடியாது. செயற்கை மூளை கொண்ட ரோபோக்களை உருவாக்கு வது வேறு. உயிரினங்களின் இயற் கையான மூளையை நமக்கு சாத கமாகப் பயன்படுத்துவதற்கான விஞ் ஞான வளர்ச்சி வேறு. இது நிச்சய மாக உயிரியல் விஞ்ஞானத்தில் ஒரு முன்னேற்றம்தான். *நன்றி: 'தந்தி'*


# கண்ணீர் அஞ்சலி

**எமது கல்லூரி ஆசிரியர் திருமதி பு.இராஜலிங்கம்**
**அவர்களின் பாசமிகு தாயார்**

**திருமதி இளையதம்பி அன்னலட்சுமி**

அவர்கள் 25.05.2002 அன்று காலமாகியதையிட்டு, அவரது பிரிவால் துயருற் றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்.

- அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி. (4280)

# பட்டமளித்துக் கௌரவித்தல் நிகழ்வு

தொல்புரம் கொட்டடியம்பதி அருள்மிகு ஸ்ரீ ஆதிமுத்து மாரியம்மன் ஆலய குருவான **சிவஸ்ரீ சுந்தரராஜக் குருக்கள்** அவர்களின் அன்புப் புதல்வன் **சிவஸ்ரீ சு.ஸ்ரீரங்கன் ஐயா** அவர்கள் திருமணம் செய்த தையும் அன்னாரது அளப்பரிய சேவையையும் பாராட்டி இன்று (29.05.2002) புதன்கிழமை அன்னாருக்கு பட்டமளித்துக் கௌரவித்தல் நிகழ்வு நடை பெறும்.

அத்துடன் ஆலய உற்சவ நாள்களில் 10 தினங்களும் தொடர் சொற்பொழிவாற்றிய **திரு.கு.கைலாயபிள்ளை** அவர்களும் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட உள்ளார்.

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

**தேவஸ்தான பரிபாலன சபையினர்,**
**கொட்டடியம்பதி ஸ்ரீ ஆதி முத்துமாரி அம்மன் கோயில்,**
**தொல்புரம்.**
(4282)

# நெஞ்சைவிட்டு நீங்காத நினைவலைகள்

## 4ஆம் ஆண்டு 6ஆம் ஆண்டு





அமரர்
**தம்பிஐயா பாலகிருஷ்ணன்**

திருமதி
**யோகேஸ்வரி பாலகிருஷ்ணன்**

| | | |
|---|---|---|
| *23.10.1930* | *உதயம்* | *05.05.1940* |
| *12.06.1998* | *அஸ்தமனம்* | *09.05.1996* |

**அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய் வாழ்ந்தீர்கள்**
**ஆதரவோடு அரவணைத்து இன்முகங்காட்டி வளர்த்தீர்கள்**
**உங்கள் அன்புமுகங்கள் என்றும் மறக்க முடியாதவை**
**ஆத்மா சாந்திபெற நல்லைக் கந்தனை வணங்குகிறோம்.**

***ஓம் சாந்தி!***

*86, நல்லூர் குறுக்கு வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.* (4281)

*என்றும் நினைவில் வாழும்:*
குடும்பத்தினர்.

# ஆவணங்களுடன் வந்தால்தான் நிவாரணத்தைப் பெறமுடியும்!

## சொந்த இடம் திரும்புவோருக்கு அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம்,மே.29

கடந்த காலத்தில் இடம்பெயர்ந்து வன்னிப்பகுதியில் தங்கியிருந்து விடடுத் தற்பொழுது குடாநாட்டுக்கு வரும் குடும்பங்கள் உரிய ஆவணங்களுடன் வந்தால் மட்டுமே நிவாரணத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று யாழ்.செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு வருகின்ற குடும்பங்கள் தாம் வன்னிப் பகுதியில் நிவாரணம் பெற்றமைக்கான ஆவணங்களை எடுத்து வந்தால் உடனடியாக அவர்களுக்கு நிவாரணம் வழங்குவதில் எவ்வித தடங்கலும் இருக்காது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேபோன்று இடம்பெயர்ந்து குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் வசித்து வருவோரும் மீண்டும் தமது சொந்த இடங்களில் குடியமரும் போது நிவாரணம் பெற்றமைக்கான ஆவணங்களை எடுத்துவந்து தமது பகுதிக் கிராம அலுவலர்களிடம் சமர்ப்பித்தால் மட்டுமே சொந்த இடத்தில் நிவாரணத்தை எடுக்கமுடியும். அத்துடன் இரண்டு இடங்களில் நிவாரணம் பெறுவதையும் தவிர்க்க முடியும்.

இம்மாதத்தில் மீண்டும் சொந்த இடங்களில் குடியமர்ந்த குடும்பங்கள் தமது மே மாதத்துக்கான நிவாரணத்தை தாம் ஏற்கனவே வசித்து வந்த பகுதியிலேயே பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் ஜூன் மாதத்துக்கான நிவாரணத்தையே தமது சொந்த இடத்தில் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாதத்துக்குமான நிவாரண ஒதுக்கீடுகள் அந்தந்தப் பிரதேச செயலர் பிரிவுகளுக்கும் ஏற்கனவே ஒதுக்கப்பட்டு விட்டமையால் இந்த நடைமுறையைக் கடைப்பிடிக்குமாறும் அடுத்த மாதத்தில் தமது சொந்த இடங்களில் நிவாரணம் பெறுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும் எனவும் பலவிதமான சிரமங்களைத் தவிர்ப்பதற்காக இந்த விடயத்தில் மக்கள் ஒத்துழைப்பை வழங்க வேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார். (க-10)


யாழ்ப்பாண றோட்டறிக் கழகம்

MANKIND IS OUR BUSINESS

அதிதிப் பேச்சாளர் தினம் 30.05.2002

'யாழ். மண்ணில் பாதம் பதித்துள்ள செலான் வங்கியின் முக்கிய பணி'

என்ற தலைப்பில் உரையாடவிருக்கிறார் யாழ்ப்பாண செலான் வங்கியின் முகாமையாளர் திரு.க.கனகசிங்கம் அவர்கள்

இடம்:- உதயன் கேட்போர் கூடம்

இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

காலம்: மே 30, 2002 (வியாழக்கிழமை) மாலை 4.45 மணி.

பொருள் பொதிந்த உரையாடலின் மகத்துவத்தை முன்னிட்டு சகல றோட்டரக்ட் கழகத்தினரையும், ஆர்வலர்களையும் தவறாது பங்குபற்றிப் பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(C/22320) - யாழ்.றோட்டரக்ட் கழகத்தினர்.



உ

இணுவில் கலாஜோதி விளையாட்டுக் கழகத்தினர் நடத்திய அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

| | | |
|---|---|---|
| முதலாம் பரிசு | - | இல. 984 |
| இரண்டாம் பரிசு | - | இல. 1005 |
| மூன்றாம் பரிசு | - | இல. 1034 |

ஆறுதல் பரிசுக்குரிய இலக்கங்கள்:

299 1120 851 81 210


பரிசில்கள் யாவும் நாளை (30.05.2002) வியாழக்கிழமை கலாஜோதி விளையாட்டுக்கழக மைதானத்தில் வைத்து வழங்கப்படும்.

கலாஜோதி விளையாட்டுக் கழகம்,
இணுவில் கிழக்கு.

(C/22321)



ஜே.கே அரங்கள்



இன்ஜினியர்கள் பாவிக்கின்ற. பெறுமதிக்கு பொருத்தமான. ஜே.கே அரங்கள் என்று கேட்டு வாங்குங்கள்

ஜெனரல் எக்கியூப்மன்ட்ஸ் லிமிடெட்

316 & 400 ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு-12.
போன்: 345046, 327264, 343822, 430799 பெக்ஸ்: 434637


## நாரந்தனைத் தாக்குதல் வழக்கு ஜூன் 25ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,மே29

கடந்த வருடம் நவம்பர் 28ஆம் திகதி நாரந்தனையில் வைத்துத் தமிழ்க் கட்சிக் கூட்மைப்பினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பான வழக்கு நேற்று யாழ்.நீதிமன்றில் விசாரணைக்கு வந்தது.

வழக்கில் சந்தேகநபர்களான 3ஆம் எதிரி ஜீவன் மற்றும் வேலணைப் பிரதேச சபைத் தலைவர் நகருணாகரகுருமூர்த்தி ஆகியோர் மன்றில் ஆஜர் செய்யப்பட்டபோதும் 2ஆம எதிரியான யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.மதனராஜா மன்றில் ஆஜர் செய்யப்படாததை அடுத்து வழக்கு விசாரணை ஜூன் மாதம் 25ஆம் திகதிக்கு ஒத்திவைக் கப்பட்டது.

நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்துகொள்வதற்காக கொழும்புககு அழைத்துச் செல்லப்பட்ட ந. மதனராஜா இன்னும் இங்கு கூட்டி வரப்படவில்லை என்று மன்றில் தெரி விக்கப்பட்டதை அடுத்து யாழ். நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராசா வழக்கு விசாரணையை ஒத்திவைத் தார். அத்துடன் ஜூன் மாதம் 11ஆம் திகதி சந்தேக நபர்களை மன்றில் ஆஜர் செய்யுமாறும் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். இந்த வழக்கின் முதலாவது சந்தேகநபரான நெப்போலியன் இதுவரை கைதுசெய்யப்படவில்லை என்பது தெரிந்ததே. (ஒ-10)

### நல்லூரில் நாய்கள் பிடிப்பு

யாழ்ப்பாணம்,மே29

நல்லூர் பிரதேச சபையின் உப-அலுவலக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இன்று புதன்கிழமை தொடக்கம் கட்டாக்காலி நாய்களை பிடித்து அழிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக நல்லூர் பிரதேச சபைத் தலைவர் க.மணி பல்லவராஜன் அறிவித்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழக வீதி, இராமநாதன் வீதி, சிவன் வீதி, பலாலி வீதி, கலாசாலை வீதி, பாற்பண்ணை வீதி, முருகன் வீதி ஆகிய பகுதிகளில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் வளர்ப்பு நாய்களுக் கான உரிமைத் தகடுகளை காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளுமபடியும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

### வடமராட்சி கிழக்கில் மருத்துவ சேவை

வடமராட்சி கிழக்குப் பிரதேச மக்களுக்கான நடமாடும் வைத்திய சேவை மருதங்கேணி அரசினர் தமிழ் வித்தியாலயம், ஆழியவளை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகிய இடங் களில் பிரதி வியாழக்கிழமை தோறும் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

முதலாவது நடமாடும் மருத்துவ சேவை நாளை வியாழக்கிழமை நடைபெறுமெனவும் பருத்தித்துறை சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்கள் இந்த சேவையின்போது பங்குபற்றுவார்களெனவும் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ந.ஞானசுதன் தெரிவித்தார்.

### கைதடிப் பாடசாலை கோவிலாகண்டியில் இயங்குகிறது

கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை இன்று புதன்கிழமை முதல் யா/கோவிலாக்கண்டி மகா லஷ்மி வித்தியாலயத்தில் இயங்கு கின்றது என பாடசாலை அதிபர் வி.ரி. திருநாவுக்கரசு அறிவித்துள்ளார்.

### விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு,மே29

யாழ். மாவட்ட பாடசாலை அணிகளுக்கிடையில் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றுவரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று புதன்கிழமை நடைபெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

**19 வயதுப் பிரிவு**

★ *காலை 8 மணிமுதல்* - தெல்லிப்பழை யூனியன் கல்லூரி எதிர் வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி வித்தியாலயம்.

★ யாழ். புனித யோசேப் வித்தியாலயம் எதிர் மானிப்பாய் இந்துக் கல்லூரி.

**17வயதுப் பிரிவு**

★ *பிற்பகல் 2.30 மணிமுதல்* - நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் எதிர் விசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்.

★ யாழ். இந்துக் கல்லூரி எதிர் அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம். (ஒ-86)

### பொதுமக்கள் சந்திப்பு

யாழ்ப்பாணம்,மே29

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உப-தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வீ.ஆனந்தசங்கரி இன்று முதல் ஐந்து தினங்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். அலுவலகத்தில் பொதுமக்களைச் சந்திக்கவிருக்கின றார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


நிறைஞ்சனாஸ் சங்கானை

LEONARD DIC APRIO
KATE WINSLET

டைட்டானிக் (தமிழாக்கம்)

காட்சிகள்: 10.30, 2.30, 5.30

(C-22147)



நாகம்ஸ் சுன்னாகம்.

மாதவன், சிம்ரன், பிரகாஷ்ராஜ் நடிப்பில்

கன்னத்தில் முத்தமிட்டால் (ரீலீஸ்)

காட்சிகள்: 11.00,3.00 (புதிய நேரம்)

(4279)



ராஜா யாழ்ப்பாணம்

31.05.2002 - 50ஆவது நாள்

விஜய், பிரியங்கா சோப்ரா, விவேக் நடித்த

தமிழன்

தினசரி: 10.30, 2.30

சனி, ஞாயிறு: 10.30, 2.30, 5.30 (பு.நே.)

27-05-2002 தொடக்கம் படம் பார்க்கும் 3 அதிர்ஷ்டசாலிகளுக்கு கடைசித் தினத்தில் பணப்பரிசில்கள் காத்திருக்கின்றன. ரிக்கெற்றுகளை கவனமாக வைத்திருக்கவும்.

(C/22146)


## மரண அறிவித்தல்கள்

### ஆறுமுகம் சத்தியமூர்த்தி

(சிற்றூர்தி உரிமையாளர்)

அந்தணத்திடலைப் பிறப்பிடமாகவும் கரணவாய் தெற்கை வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சத்தியமூர்த்தி 27.05.2002 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.05.2002) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் வாரிவட்டம், கரணவாய் தெற்கில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வாரிவட்டம்,*
*கரணவாய் தெற்கு,*
*கரவெட்டி.*

தகவல்:
செ.செல்வநாதன்
(சகலன்)

(C/22318)

### திருமதி தங்கராசா வள்ளியம்மை (பூமா)

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கராசா வள்ளியம்மை நேற்று (28.05.2002) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - பூரணம் ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து - சின்னம்மா ஆகியோரின் அன்பு மருமகளும், தங்கராசா (போதனா வைத்தியசாலை) அவர்களின் அன்பு மனைவியும், திருவருட்செல்வன், கல்வியியற் கல்லூரி மாணவர்களான றஞ்சன், கவிதா ஆகியோரின் அன்புத் தாயாரும், தங்கரத்தினம் விசுவலிங்கத்தின் அன்பு மைத்துனியும், கந்தையா, மயில்வாகனம், அமரர் மாரிமுத்து மற்றும் தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (29.05.2002) புதன்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பத்திரகாளி கோயிலடி,*
*திருநெல்வேலி.*

தகவல்:
சி.தங்கராசா
(கணவர்)

(4291)

### திருமதி ஞானப்பிரகாசம் மேரி மாகிறேற்

*(நாவற்குழி)*

பத்தாவத்தையைப் பிறப்பிடமாகவும் நாவற்குழி புனித அந்தோனியார் கோயிலடியை வசிப்பிடமாகக் கொண்டவரும் தற்போது 7/1, மத்தியூஸ் வீதியில் வசித்தவருமான திருமதி ஞானப்பிரகாசம் மேரி மாகிறேற் அவர்கள் நேற்றுமுன்தினம் (27.05.2002) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் ஞானப்பிரகாசத்தின் அன்பு மனைவியும் பற்றிமா மலர் (பனை அபிவிருத்திச் சபை எழுதுநர் - யாழ்./கிளிநொச்சி), சூசைநாதர் (சிக்மா வோட்டர் பம்ப் - கொழும்பு), மேரிலூட்ஸ் (அரச முதியோர் இல்லம், கைதடி), லூர்துமேரி, புதுமைமலர், ஞானாமிர்தம் (ஆசிரியை, யா/நாவற்குழி ம.வி.), யேசுதாசன் (டோகா), மேரிகிறேஸ் (அன்பு அச்சகம், கிளிநொச்சி), றோசலின் ஈஸ்வரி (கொழும்பு), இம்மனுவேல் ஈஸ்வரன் (இசையரசி மிதிவண்டி சீர்களம், நாச்சிக்குடாச் சந்தி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் நீக்கிலாஸ், சந்திரா, கனகரத்தினம், அன்ரனிராஜ், மரியநாயகம், சியாமளா, காலஞ்சென்ற கனகசுந்தரம் மற்றும் ஜெகன், சொரூபினி ஆகியோரின் அன்பு மாமியாரும் கலிஸ்ரா, சுஜித்திரா, அன்ரன், அனிற்றா, கசில்டா, திலானி, றெபேக்கா, அருள்ராஜ், மரியராஜ், மரியமலர், ஜீவமலர், புஷ்பமலர், டிறோன், யேசுதன், கஜனி, கனியூட், கஜன், சையூட், சங்கீதா, விதுஷனா, கீர்த்தனா ஆகியோரின் அன்புப் பாட்டியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (29.05.2002) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் யாழ். மரியன்னை தேவாலயத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.7/1,*
*மத்தியூஸ் றோட்,*
*யாழ்ப்பாணம்,*

தகவல்:
திரு.திருமதி கனகரத்தினம் குடும்பம்
(சின்னக்கடவுள் மேரி அன்ரன்)

(4295)

### கண்ணீர் அஞ்சலி

*எமது சக ஊழியர்*

செல்வி மேரி லூட்ஸ் ஞானப்பிரகாசம் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி ஞானப்பிரகாசம் மேரி மாகிறேற்**

அவர்களின் மறைவினால் துயரடையும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

அரச முதியோர் இல்லம், கைதடி. - அதிபரும். உத்தியோகத்தர்களும்.

(4293)

### கண்ணீர் அஞ்சலி

*எமது பாடசாலை ஆசிரியை*

திருமதி ஞா. மரியநாயகம் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி ஞானப்பிரகாசம் மேரி மாகிறேற்**

அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/நாவற்குழி மகாவித்தியாலயம். கைதடி

அதிபர். ஆசிரியர்கள். மாணவர்கள். கல்வி சாரா ஊழியர்கள்.

(4292)

# வற்றாப்பளை ஆலயத் திருவிழாவில் 2½ லட்சத்துக்கு அதிக பக்தர்கள்

வவுனியா,மே29

12 ஆண்டுகளுக்குப் பின்னர் வற்றாப்பளை அம்மன் ஆலய பொங்கல் திருவிழா' நேற்றுமுன்தினம் இரவு வெகுகோலகல்மாக நடைபெற்றது. நாட்டின் பல பகுதிகளிலும் இருந்து இரண்டரை லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் இத்திருவிழாவுக்கு வருகை தந்திருந்தனர்.

நீர்கொழும்பு உட்பட தென்பகுதியில் இருந்து பெருமளவு மக்கள் விளக்குவைத்தகுளம் சோதனைச் சாவடியூடாக வற்றாப்பளைக்கு வந்திருந்தனர். யாழ்ப்பாணத்தில் இருந்தும் வன்னிப் பெருநிலப்பரப்பில் இருந்தும் பெருமளவு மக்கள் திருவிழாவில் கலந்துகொண்டனர்.

திருவிழாவுக்கு வருகைதந்த மகளுக்காக விடுதலைப் புலிகள் விசேட பாஸ் முறையை நடைமுறைப்படுத்தினர்.

பெரும் எண்ணிக்கையில் மக்கள திரண்டதால் பொங்கல் வைப்பதற்கு இடமில்லாத பிரச்சினை ஏற்பட்டது. இதனால் இரவு தொடங்கி அதிகாலை வரை பொங்கல் வைக்கப்பட்டது. (ஐ-6)

### மட்டக்களப்பு நகரப்பகுதியில்

# துர்நடத்தையில் ஈடுபட்ட இளம் ஜோடிகள் சிக்கின!

கொழும்பு,மே29

மட்டக்களப்பு நகரப் பகுதியில் தவறான நடத்தையில் ஈடுபட்டதாகக் கூறப்படும் இரண்டு இளம் ஜோடிகளை கையும் மெய்யுமாகப் பிடித்த மாணவர் அமைப்பினர் அவர்களை எச்சரிக்கை செய்த பின்னர் பெற்றோர்களிடம் ஒப்படைத்தனர்.

மட்டக்களப்பு நகரின் பல்வேறு பகுதிகளில் இத்தகைய சமூக கலாசார சீர்கேடுகள் கடந்த சில வருடங்களாக நடைபெற்று வருவதாக மட்டக்களப்பு சமூக மேம்பாட்டு குழுவினர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

சில தேசவிரோத சக்திகள் திரைமறைவில் இத்தகைய செயற்பாடுகளுக்கு ஆதரவு வழங்கி வருவதாகவும் அந்தக் குழு குற்றம் சாட்டியுள்ளது.

மட்டக்களப்பில் ஆபாசப்படங்களை வாடகைக்கு கொடுப்பவர்களுக்கு எதிராகவும், பார்வையிடுபவர்களுக்கு எதிராகவும் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சமூக மேம்பாட்டுகுழு தெரிவித்துள்ளது. (ஐ-6)

## புலிகள் இலவச பஸ் சேவை

வவுனியா,மே29

விடுதலைப் புலிகள் புளியங்குளம் சோதனைச் சாவடிக்கும் விளக்குவைத்தகுளம் சோதனைச் சாவடிக்கும் இடைப்பட்ட பகுதியிலான பஸ் சேவையை இலவசமாக நடத்துகின்றனர்.

சுமார் ஐந்து மைல் தூரம் கொண்ட இப்பகுதியைக் கடந்து செல்ல முன்னர் 20 ரூபாவும் சூனியப் பிரதேசத்தைக் கடக்க 5ரூபாவும் அறிவிடப்பட்டன. (ஐ)

### மனிதாபிமான.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு அளித்தார்.

மணற்காடுப் பகுதியில் காலை 4 மணிக்குப் பின்னரே மீன்பிடிக்க அனுமதி வழங்கப்படுகின்றது என்று அப்பகுதி மீனவர் முறைப்பாடு செய்துள்ளதாக கடற்படைத் தளபதியிடம் கண்காணிப்புக் குழு உறுப்பினர் வண. பிதா ஞானரத்தினம் சுட்டிக்காட்டினார். அதையிட்டு நடவடிக்கை எடுப்பதாகக் கூறிய தளபதி, மனிதாபிமான அடிப்படையிலேயே மீன் பிடிக்க அனுமதி வழங்கியுள்ளோம். நாம் விரும்பினால் மீண்டும் தடையைக் கொண்டுவருவோம் என்றார்.

தீவகத்துக்கு புலிகள் செல்லும் போது கண்காணிப்புக் குழு உறுப்பினர் ஒருவரும் உடன் செல்ல வேண்டும் என்று தளபதி தெரிவித்த கருத்தை கண்காணிப்புக் குழுவினர் ஏற்க மறுத்துவிட்டனர்.

தீவகத்துக்கு அரசியல் பணியை மேற்கொள்ள புலிகள் செல்வதற்கு நிபந்தனை எதுவும் விதிக்கக்கூடாது. ஏனைய பகுதிகளில் அவர்கள் அரசியல் பணியை மேற்கொள்வது போன்று தீவகத்திலும் அரசியல் பணி மேற்கொள்ள அனுமதிக்க வேண்டும் என்று வண. ஞானரத்தினம் கோரிக்கை விடுத்தார்.

அரசு விதித்துள்ள 12 நிபந்தனைகளையும் புலிகள் ஏற்று நடந்தால் மட்டுமே தீவகத்துக்குச் செல்ல அனுமதிக்க முடியும் என்று கடற்படைத் தளபதி உறுதிபடத் தெரிவித்தார் என்று கூறப்பட்டது. (ஐ-3)

## ஹெல்கிஸன் லண்டன் திரும்பினார்

கொழும்பு,மே29

கொழும்பில் பேச்சுக்களை முடித்துக் கொண்டு நேற்றுக்காலை லண்டன் புறப்பட்ட நோர்வே சமாதானக் குழுவின் தலைவரும் பிரதி வெளிவிவகார அமைச்சருமான விடர் ஹெல்கிஸன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை இன்று லண்டனில் சந்தித்துப் பேச்சு நடத்தவிருக்கின்றார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் கொழும்பில் நடத்திய பேச்சுக்களின் விவரங்களை அவர் பிரதமர் ரணிலிடம் தெரிவிப்பார்.

அதையடுத்து விடுதலைப் புலிகள் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடன் ஹெல்கிஸன் கலந்துரையாடுவார். (ஐ-3)

### 'சயனைட்'.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விதித்திருக்கிறது. இதுபற்றி கடற்படைத் தளபதி அங்கு பிரஸ்தாபித்தார்.

கண்காணிப்புக் குழுவில் இடம் பெறும் புலிகள் தரப்பு உறுப்பினர் வணபிதா ஞானரத்தினம், கடற்படைத் தளபதியின் கருத்தை ஆட்சேபித்தார். சயனைட் வில்லையை புலிகள் ஆயுதமாக ஒருபோதும் பயன்படுத்த மாட்டார்கள் என்று அவர் அங்கு தெரிவித்தார்.

புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் இயக்கத்தில் இணைந்து உறுதிப்பிரமாணம் எடுக்கும்போது சயனைட் குப்பி அவருக்கு வழங்கப்படுகிறது. எதிரியிடம் உயிருடன் பிடிபடக்கூடாது என்ற ஒரே லட்சியத்துக்காகவே புலிகள் சயனைட் குப்பிகளை அணிந்திருக்கின்றனர். அதனை அவர்கள் ஆயுதமாகப் பயன்படுத்துவதில்லை. - என்று தெரிவித்தார் வணபிதா ஞானரத்னம். (ஐ-3)

### மீன்பிடி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதை அரசு கௌரவமாக நடைமுறைக்குக் கொண்டுவந்திருக்க வேண்டும். சுதந்திரமாக மீன்பிடிப்பது என்பது, மீனவர்கள் விரும்பிய இடத்தில், விரும்பிய நேரத்தில் மீன்பிடிக்க அனுமதிக்கப்படுதல் என்பதாகும். ஆனால், அவ்வாறு அனுமதிக்கப்படவில்லை.

வடமராட்சி வடக்கில் பாஸ் இன்றி இயந்திரப் படகுமூலம் மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. அவர்கள் சுதந்திரமாக மீன்பிடிக்கக்கூடிய வகையில் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படவில்லை. வலி.மேற்கில் குறிப்பிட்ட தூரம், நேரம் என்ற கட்டுப்பாடுகள் உள்ளன. இயந்திரப் படகுகளில் மீன்பிடிக்க அனுமதிக்கப்படவில்லை.

யாழ்.கடலேரியில் குருநகர், பாசையூர், நாவாந்துறை, கொழும்புத்துறை, காக்கைதீவு ஆகிய இடங்களில் முன்னர் இருந்த நடைமுறைகள் தொடர்ந்தும் அமுலில் உள்ளன. பாஸ் நடைமுறை, கடற்பரிசோதனை, நேரக் கட்டுப்பாடு, தூரக்கட்டுப்பாடு தொடர்ந்தும் நடைமுறையில் உள்ளன. முன்னரைவிட கட்டுப்பாடுகள் இறுக்கப்பட்டு வருவதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர். குடாநாட்டில் எந்த இடத்திலும் சுதந்திரமான மீன்பிடித்தலுக்கு இன்னமும் அனுமதிக்கப்படவில்லை - என்றார் அவர். (ஐ)

### தென்மராட்சிப் பிரதேசத்தில்

# பனை தறிப்பதற்கு எதிராக விரைவில் சட்ட நடவடிக்கை

யாழ்ப்பாணம்,மே29

தென்மராட்சி பிரதேசத்தில் பனை மரங்கள் கண்டபடி தறிக்கப்படுவதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க பனை அபிவிருத்திச்சபை முடிவு செய்துள்ளது.

இந்த நடவடிக்கைக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்வது தொடர்பாக சட்ட ஆலோசனைகள் பெறப்பட்டுள்ளன என்று பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பொ.சிவபாதம் தெரிவித்தார்.

பனை மரங்களைத் தறிப்பது சட்டவிரோத நடவடிக்கை என்று அரசமைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் -

அதை மீறி படையினர் பனை மரங்களைத் தறித்து வருகின்றனர் என்றும் -

அவர் மேலும் தெரிவித்தார்.

பனை மரங்களைப் பாதுகாக்கும் நோக்குடன் இந்த வழக்கைத் தாக்கல் செய்ய விருப்பதாகத் அவர் கூறினார்.

இதேவேளை - குடாநாட்டின் எந்தப் பகுதியில் பனை மரங்கள் தறிக்கப்பட்டாலும் உடனடியாக அதுபற்றி தங்களுக்குத் தகவல் தரும்படி அவர் பொதுமக்களைக் கேட்டுள்ளார். (ஐ-3)

### அரசு மீது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உடன்படிக்கையில் அரசும் நாங்களும் இணங்கிக் கொண்டோம் ஆனால் புரிந்துணர்வு உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கால அட்டவணைப்படி படையினர் வழிபாட்டுத் தலங்கள், பாடசாலைகள், பொதுக் கட்டடங்கள் ஆகியவற்றிலிருந்து இன்னும் வெளியேறவில்லை. படையினர் இப்படி உடன்படிக்கைக்கு மாறாக நடந்து கொள்வதால் பேச்சு நடைபெறுவதற்கு கெடுதியாக அமைந்துவிடும்.

முன்னர் எதிர்பார்த்த காலப்பகுதில பேச்சு நடப்பது சாத்தியமில்லை என்பதை நோர்வே அனுசரணையாளர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால அதில் உள்ள பிரச்சினைகளை அவர்கள் அடக்கி வர்சிக்கிறார்கள் - என்றார் பாலசிங்கம்.

இயல்பு நிலை ஏற்படாமலும் புலிகள் மீதான தடை நீக்கப்படாமலும், புரிந்துணர்வு உடன்படிக்கை சரிவர அமுல்படுத்தப்படாமலும் இருக்கும் வரை பேச்சு நடத்தும் சாத்தியமே இல்லை என்று திட்டவட்டமாகத் தெரிவித்தார் பாலசிங்கம். (ஐ)

### இத்தாலிக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டதை அடுத்து கிடைத்த தகவல்களின் பேரிலேயே குழுவின் தலைவர் கைது செய்யப்பட்டார்.

பாகிஸ்தானியர்கள் உட்பட 72 பேரையும் இத்தாலிக்கு அழைத்துச் செல்லவிருந்த இயந்திரப் படகைக் கண்டுபிடிக்க விசேட பொலீஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றன.

கடற்படையினரின் உதவியையும் பொலீஸார் நாடியிருக்கின்றனர்.

### தொலைபேசி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புக்களும் உள்வரும் அழைப்புகளுக்கு 72 இணைப்புக்களும் செயற்பட்டு வந்தன. தற்போது வெளிச்செல்ல 120 இணைப்புக்களும் உள்வருவதற்கு 120 இணைப்புக்களும் பொருத்தப் பட்டுள்ளன.

இந்த இணைப்புக்கள் அடுத்த கட்டமாக மேலும் அதிகரிக்கப்படவிருக்கின்றன என்று ரெலிகொம் வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-3)

# தீவகத்துக்கு புலிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் ஆயுதம் தரிக்காத விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் சுதந்திரமாக நடமாடுதல் தொடர்பாக ஏற்கனவே எமக்குள் இடம்பெற்ற கலந்துரையாடலை கவனத்தில் எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

யுத்தநிறுத்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் வழிமுறைகளுக்கு அமைய விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் தீவுப் பகுதிகளுக்குள் பிரவேசிப்பதற்கான வழிவகைகளை உடனடியாக ஏற்படுத்திக் கொடுக்குமாறு 16-05-2002 ஆம் திகதி கடற்படைத் தளபதியுடன் தீவுப் பகுதிக்கு விஜயம் செய்த பொருளாதார மறுசீரமைப்பு, தொழில்நுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொட உத்தரவிட்டுள்ளார் என்பது தாங்கள் அறிந்ததே. இதன்படி கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு அமைவாக விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் தீவுப் பகுதிகளுக்குள பிரவேசிக்க அனுமதி வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தயாராக இருக்கின்றனர் என்பதைத் தங்களுக்கு அறியத்தருகிறேன்.

*நிபந்தனைகள் வருமாறு:-*

- விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் தங்களைச் சரியாக அடையாளப்படுத்தக்கூடிய ஆவணங்களை வைத்திருக்க வேண்டும்.
- தங்களது அரசியல் நடவடிக்கைகளை பகல்நேரத்தில் மட்டும் மட்டுப்படுத்திக்கொள்ளவேண்டும். காலை 8.00 மணிக்கு தீவுப்பகுதிக்குள் பிரவேசித்து மாலை 6.00 மணிக்கு அங்கிருந்து வெளியேறிவிட வேண்டும்.
- ஆயுதங்கள், தொலைத்தொடர்பு சாதனங்கள், சயனைட் குப்பிகளை எடுத்துச்செல்லக்கூடாது.
- கண்காணிப்புக்குழு உறுப்பினா ஒருவருடனேயே செல்லவேண்டும்.
- 48 மணிநேர முன்னறிவித்தல் கொடுக்கப்படவேண்டும்.
- அல்லைப்பிட்டியில் உள்ள கடற்படை வீதிச் சோதனை நிலையத்தின் ஊடாகவே போக்குவரத்து செய்ய வேண்டும்.
- நெடுந்தீவு, நயினாதீவு, எழுவைதீவு மற்றும் அனலைதீவு ஆகிய தீவுகளில் அரசியல் பணிபுரியச் சென்றால் அங்கிருந்து பின்னர் குறிகாட்டுவான் இறங்குதுறை ஊடாக இழுவை படகுகளிலேயே (Ferries) திரும்பி வரவேண்டும்.
- படை நிலைகள், படைத் தளங்கள், முகாம்கள், படைப்பிரிவுகள், அவர்கள் பணிபுரியும் இடங்களுக்குள் புலிகள் உட்பிரவேசிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள். அரசியல் பிரசார வேலைகளுக்காக பிரதான வீதிகள் வழியே மக்கள் குடியிருப்புப் பகுதிகளுக்குள் செல்ல புலிகள் அனுமதிக்கப்படுவர்.
- ஒவ்வொரு தீவுகளுக்குள்ளும் அந்தந்தத் தீவுகளில் வசிக்கும் மக்கள் தொகைக்கு ஏற்பவே விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் அங்கு செல்ல அனுமதிக்கபடுவர்.

தீவுகளும் அவற்றுக்குச் செல்ல அனுமதிக்கப்படும் உறுப்பினர்களின் ஆகக் கூடிய எண்ணிக்கையும் வருமாறு:-

| | |
|---|---|
| ▲ ஊர்காவற்றுறை | - 50 பேர் |
| ▲ புங்குடுதீவு | - 10 பேர் |
| ▲ நயினாதீவு | - 10 பேர் |
| ▲ எழுவைதீவு | - 10 பேர் |
| ▲ அனலைதீவு | - 05 பேர் |
| ▲ நெடுந்தீவு | - 50 பேர் |
| ▲ காரைநகர் | - 50 பேர் |

- தீவுகளுக்குள் உட்பிரவேசிக்கும் புலிகள் இயக்க உறுப்பினர்/உறுப்பினர்கள், குறிப்பிட்ட நேரத்துக்குள் அங்கிருந்து வெளியேறாவிட்டால் அதுபற்றி கண்காணிப்புக் குழுவுக்கு முறையிடப்படும். ஒரு தீவினுள் பிரவேசித்து வெளியேறாமல் எஞ்சியுள்ள உறுப்பினர்கள் அங்கிருந்து வெளியேறாதவரை அந்தத் தீவுக்கு வேறு எந்த உறுப்பினர்களும் எத்தகைய தேவையைக் கருதியும் அனுமதிக்கப்படமாட்டார்கள்.
- விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் அரசியல் நடவடிக்கைளில் மட்டுமே ஈடுபட அனுமதிக்கப்படுவர். புரிந்துணர்வு உடன்படிக்கையின் 2.1, 2.2 ஆகிய சரத்துகளில் கூறப்பட்டுள்ள விடயங்களில் ஈடுபடுவதை அவர்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும். நாட்டின் வழமையான சட்டங்களுக்குக் கட்டுப்பட்டே அவர்கள் நடந்துகொள்ள வேண்டும்.
- மண்டைதீவு ஒரு சிறிய தீவு. அங்கு 230 பொதுமக்களே உள்ளனர். விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் கல்முனைப் பகுதிக்கு மிக நெருக்கமாக அது அமைந்துள்ளதால் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் எவரும் அரசியல் பணிக்காக அங்கு செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள். மண்டைதீவுப் பகுதி மக்கள், ஊர்காவற்றுறை, புங்குடுதீவு ஆகிய தீவுகளில் இடம் பெறும் புலிகளின் அரசியல் கூட்டங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

- இந்தத் தவகல்களை விடுதலைப் புலிகள் அமைப்பினருக்குத் தெரியப்படுத்தி இந்த நிபந்தனைகளுக்கு அவர்களது இணக்கத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

- இவ்வாறு அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9-10)

**புதிய பிரிவுகள்**

அநேக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க. நிறுத்தப்பட்டிருந்த அனுமதிகள் தளர்த்தப்பட்டு. அனைத்து **Diploma** கற்கைநெறிகளுக்கும் 2 ஆவது புதிய பிரிவுகள் 02.06.2002 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட இருக்கின்றது என்பதை மாணவர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

இயக்குநர்,
IIS,
யாழ்ப்பாணம்
(C/22303)

**வேலையாள்கள் தேவை**

பில் கிளாக், கவீற் மேக்கர், ரீ மேககர், உதவியாளர்கள், பாசல மேக்கர் உடன் தேவை.நேரில் வரவும்.

தொடர்பு:
**சரஸ்வதி விலாஸ்**
195 (57), K.K.S.வீதி,
யாழ்ப்பாணம். (4296)

எமது புதிய வீடியோ CD வெளியீடு
சூர்யா, லைலா
**உன்னைநினைத்து**
**I.T.N.**
பலாலி வீதி, பரமேஸ்வராச்சந்தி (4287)

**SPOKEN ENGLISH WITH GRAMMAR**
**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

| பிரிவு I | பிரிவு II |
|---|---|
| 01.06.2002 சனி காலை 7 மணி | 03.06.2002 திங்கள் மாலை 4 மணி |
| Saturday, Sunday: 7a.m. - 8a.m. | Monday, Wednesday: 4p.m. - 5p.m. |

Lectures By:- **MR.M.A.HARI**
☆ அனுமதிக்கு முந்திக்கொள்ளுங்கள் ☆
Director, **HARY'S INSTITUTE**
Kondavil East, Kondavil (4283)

எமது புதிய வீடியோ CD வெளியீடு
சூர்யா, லைலா, ஸ்நேகா நடித்த
**உன்னைநினைத்து**
(பிரதிகள் உடன் பெறலாம்)
**வீடியோ விமல்**
யாழ்ப்பாணம். (C/22322)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.05.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.